# நாங்கள் வரலாறு படைத்தோம்

வீரம் செறிந்த தெலுங்கானா போராட்டத்தில்
பங்கேற்ற வீராங்கனைகளின் பதிவு



தொகுப்பு
பேரா. ஆர். சந்திரா

# நாங்கள் வரலாறு படைத்தோம்

(வீரம் செறிந்த தெலுங்கானாப் போராட்டத்தில் பங்கேற்ற பெண் வீராங்கனைகளின் பங்கை எடுத்துக்கூறும் வாய்மொழி வரலாறு)

('We were making History')

'வி வேர் மேக்கிங் ஹிஸ்டரி' என்ற ஆங்கில நூலை தழுவி சுருக்கிய வடிவில்

**பேரா. ஆர். சந்திரா**

பாரதி புத்தகாலயம்

**NANGAL VARALARU PADAITHOM**
**CHANDRA**

First Published : 2008

ISBN : 81-904211-7-4

Published by:
**BHARATHI PUTHAKALAYAM**
421, Anna Salai, Teynampet, Chennai-600 018
**SHOW ROOM**
7, Elango Salai, Teynampet, Chennai - 600 018
☎: 044-24332424, 044-24332924

நாங்கள் வரலாறு படைத்தோம்
பேரா. ஆர். சந்திரா
முதற் பதிப்பு : பிப்ரவரி 2008

வெளியீடு :
பாரதி புத்தகாலயம்
421, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018
விற்பனை மையம் :
7, இளங்கோ சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
☎: 044-24332424, 2433 2924
email: thamizhbooks@gmail.com

ரூ. 10/-

அச்சு : ஜோதி ப்ராசஸ், சென்னை - 8, அட்டை வடிவமைப்பு : ஸ்பேசஸ், சென்னை-18
அட்டை அச்சு : பிரிண்ட் ஸ்பெஷாலிட்டிஸ், சென்னை-14

# முன்னீடாக...

'தெலுங்கானா விவசாயிகளின் புரட்சிப் போராட்ட அனுபவங்கள் பாட்டாளி மக்களின் விடுதலை இயக்கங்களுக்கு எண்ணற்ற பாடங்களைக் கற்றுத்தரும் பலவிதக் கண்ணோட்டங்களிலிருந்துப் படித்தறிய வேண்டும். அவ்வியக்கத்தில் இருந்துப் பிரச்சனைகள், போராட்ட வடிவங்கள், நடைமுறை தந்திரங்கள் இருசாராரின் வலிமையையும், பலவீனங்களையும் கணக்கிடுதல் ஆகிய பல விஷயங்களையும் ஆழ்ந்து பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது'.

எம். அனுமந்தராவ் - 1953 இல்
(பிரஜாசக்தி நாளிதழ் ஆசிரியர்)

இந்தியா விடுதலை அடைந்து அரை நூற்றாண்டு காலம் முடிந்து விட்டது. விடுதலைப் போரையொட்டியே நிலபிரபுத்துவ அமைப்பை தகர்க்க ஏராளமான மக்கள் போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. வரலாற்று ஆசிரியர்களால் மறக்கப்பட்ட தியாகிகள் எண்ணற்றவர்கள். நிலபிரபுக்களின் கொடுமையான அடக்குமுறைகளை சந்தித்து, அதை எதிர்த்து வீரம் செறிந்த போராட்டத்தை நடத்தி தங்கள் இன்னுயிரை தியாகம் செய்த ஆண்களும், பெண்களும் எண்ணற்றோர். வரலாற்று புத்தகங்களை புரட்டிப் பார்க்கையில் எத்தனை பெண்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன? பொதுவாக நிறைய பேருக்குத் தெரிந்த பெயர்கள் ரஜியா சுல்தானா, ஜான்சி ராணி, லஷ்மிபாய், கஸ்தூரிபாய் காந்தி, கமலா நேரு, சரோஜினி நாயுடு போன்றோர். இந்திய விவசாயப் பெருமக்களுக்கு ஒரு ஒளிமயமான பாதையை வகுத்துக் கொடுத்த 'தெலுங்கானா' போராட்ட வீராங்கனைகளான அயிலம்மாவையும், முத்தம்மாவையும் சாலம்மாவையும், அவர்களைப் போன்ற பல வீரம் மிக்க பெண்களை நம்மில் பலருக்கும் தெரியாது.

இந்தியாவில் விவசாயிகளின் போராட்டங்களில் மிகவும் முக்கியமான இடம் தெலுங்கானா போராட்டங்களில் உண்டென்பதில் ஐயமில்லை. நிலத்திற்காகவும், நிலப்பிரபுக்களும், அரசு அதிகாரிகளும் கட்டாயப்படுத்தி உழைப்பை சுரண்டியதிலிருந்து விடுதலை பெறவும் அடிமைத்தளைகளையும் உடைத்தெறிவதற்காகவும்,

தெலுங்கானா மக்கள் எழுச்சி மிகுந்த, தியாகம் நிறைந்த போராட்டம் நடத்தி வரலாற்றில் நீங்கா இடம் பிடித்து விட்டனர். தெலுங்கானா வீரத்தின் விளைநிலம் என்றால் மிகையாகாது. நிஜாமின் கொடூரமான செயல்களை நினைக்கவே அச்சமூட்டுவதாகவும், அநாகரிகமானதாக வும் இருந்ததுடன், அதற்கு கொஞ்சமும் சளைக்காத காங்கிரஸ் ஆட்சியாளர்கள் மத்திய அரசின் ராணுவத்தை அனுப்பி மக்களை நரவேட்டையாடியது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக பெண்களை சித்திரவதை செய்த விதம் நாகரிக சமூகத்தை தலைக்குனியச் செய்யும். கம்யூனிஸ்டுகளை அடக்கி, ஒடுக்க ஆட்சியாளர்கள் செய்த அட்ட காசங்கள் தான் எத்தனை, எத்தனை? கம்யூனிஸ்டுகளைப்பற்றி விபரங் களை வெளிக்கொணர பெண்களை அவர்கள் செய்த சித்திரவதை களை அப்பெண்கள் தாங்கிக் கொண்டதும், எதிரிகளை துணிச்ச லுடன் எதிர் கொண்டதும் மெய்சிலிர்க்க வைக்கின்றன.

## தெலுங்கானாப் போராட்டம்

தெலுங்கானாப் போராட்டம் விவசாயிகளின் விடுதலைக்கான போராட்டம் பற்றி நிறைய நூல்கள் வெளிவந்துள்ளன. போராட்டம் நடைபெற்ற விதம், அதிலிருந்து கிடைத்த படிப்பினைகள், தத்துவார்த்த ரீதியாக எழுந்த பிரச்சனைகள் பற்றியெல்லாம் எழுதப் பட்டுள்ளன. நிலத்திற்காகவும், நிலப்பிரபுக்களின் கொடுமைகளி லிருந்து விடுபடுவதற்காகவும், தெலுங்கானா மக்கள் நடத்தியப் போராட்டம் இந்திய வரலாற்றில் ஒரு அழியா இடம் பெற்றுள்ளது. நம்மில் நினைத்துக்கூட பார்க்க இயலாத கொடுமைகளை ஹைதராபாதின் நிஜாம் மன்னனின் குண்டர்கள் செய்திருக்கின்றனர். எப்படிப்பட்ட அரக்கர்களையும் ஒன்றுபட்ட மக்கள் சக்தியால் எதிர்கொள்ள முடியும் என்பதற்கு ஒரு மிகச்சிறந்த முன்னுதாரணம் தெலுங்கானா போராட்டம். இதில் பங்கேற்ற சில வீராங்கனைகளின் வாழ்க்கையை நமக்கு தந்திருக்கும் நூல் 'ஸ்ரீசக்தி சங்கடனா' என்ற அமைப்பு கொண்டு வந்துள்ள நூலாகும். 'நாங்கள் வரலாறு படைத் தோம்...' என்ற இந்நூலில் வரும் சம்பவங்கள் நமக்கு ஊக்கமளிக்கும். அந்த வீரப்பெண்களின் வரலாறு நமக்கு சிறந்ததொரு பாடமாக இருக்கும் என்ற எண்ணத்துடன் 'வி வேர் மேக்கிங் ஹிஸ்டரி' என்ற நூலைத் தழுவி, சுருக்கி தமிழில் இந்த நூலை கொண்டு வந்துள் ளோம்..

## வரலாற்றுப் பின்னணி

ஆங்கிலேயர் ஆட்சியில் ராஜாக்கள், நவாப்புகள் ஆட்சி செய்த மாகாணங்கள் உண்டு. ஹைதராபாத் அன்று நிஜாம்களின் ஆதிக்கத் தில் இருந்தது. நிஜாமுக்கு சொந்தமான நிலம் மாகாணம் முழுவதும் இருந்தது. நிஜாமைத் தவிர, நிலவரி வசூல் செய்வதில் முக்கிய பங்காற்றிய 'தேஷ்முக்'குகளும் 'தேசாய்'களும் ஏராளமான நிலத்திற்கு



உரிமையாளர்களாக இருந்தனர். அவர்கள் செய்த கொடுமையும் பிரசித்தி பெற்றது. சாகுபடிக்கான நிலங்களில் 60% பெரும் நிலப் பிரபுக்களுக்கு சொந்தமாக இருந்தது. நில உரிமையை வழங்காமல், நிலவரியை மட்டும் சாகுபடியாளர்கள் கட்ட வேண்டுமென நில பிரபுக்கள் வலியுறுத்தினர். சலவைத் தொழிலாளி, முடி திருத்துபவர், மரவேலை செய்பவர் என அனைவரும் நிலபிரபுக்களுக்கு கூலி ஏதும் இன்றி கட்டாய உழைப்பு (வெட்டி) செலுத்த வேண்டும். இப்படி வேலை செய்வோர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள். வாங்கிய கடனை திருப்ப இயலாமல் அடிமைகள் போல நடத்தப்பட்டனர். விவசாயிகளையும், கூலித் தொழிலாளர்களையும் அடக்கி ஒடுக்க நிஜாம்கள் ஒற்றர்படை வைத்திருந்தனர். நிலபிரபுக்களின் நிலத்தில் வேலையை முடித்தபின்பே தங்கள் நிலத்தில் சிறுவிவசாயிகள் வேலை செய்ய முடியும். இல்லையெனில் கடுமையான தண்டனை வழங்கப்படும்.

பெண்களின் நிலைபற்றி கேட்கவே வேண்டாம். நல்ல துணி உடுத்திக்கொள்ளக் கூடாது. தலையில் பூ வைத்துக் கொள்ளக்கூடாது. சாப்பிட்டுக் கொண்டிருந்தால் கூட 'துரை' அல்லது 'துரைசாணி' அழைத்தால், சாப்பிடுவதை நிறுத்திவிட்டு ஓட வேண்டும். நிலப்பிரபு வின் நிலத்தில் வேலை செய்யும்போது குழந்தைக்கு பாலூட்டக்கூட விட மாட்டார்கள். இந்துப்பெண்கள் மீது நிலப்பிரபுக்களுக்கு எல்லா உரிமையும் உண்டு. நிலபிரபுக்களின் பாலியல் தாக்குதல்களுக்கு ஆளாகிய விவசாயப் பெண்கள் பட்ட துயரங்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

## மாதர் அமைப்புகள்

பல கொடுமைகள் அனுபவித்ததன் காரணமாக, நில பிரபுக்களை எதிர்த்து பெண்கள் போராடினர். 1916லிருந்தே மகளிர் அமைப்புகள் ஆந்திராவில் செயல்படத் துவங்கின. நிலபிரபுத்துவ கலாசாரம் பெண்கள் வீட்டிற்கு வெளியே செல்ல பெரும் தடையாக இருந்தது. இருப்பினும் பெண் கல்வி, விபச்சார ஒழிப்பு, பர்தா முறை ஒழிப்பு, விதவை மறுமணம் என்ற பல்வேறு பிரச்சனைகளை பெண்கள் விவாதித்தனர். மகளிர் அமைப்புகள் தோன்றியதால் பெண்கள் பொது வாழ்வில் ஈடுபட ஊக்கம் கிடைத்தது. 1936ல் கிருஷ்ணா மாவட் டத்தில் சந்திரா ராஜேஸ்வரராவ் தலைமையில் அமைக்கப்பட்ட மாதர் சங்கம் விவசாயப்பெண்களை திரட்டும் பணியை செய்தது. ஆந்திரகம்யூனிஸ்ட் கட்சியில் நிறைய பெண்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்தனர். மாணவர்களும், இளைஞர்களும் சேர்ந்து 'தோழர்கள் சங்கம்' என்ற அமைப்பை ஏற்படுத்தினர். 1939-42 வரை கம்யூனிஸ்ட் கட்சி தடை விதிக்கப்பட்டிருந்தபோது 'தோழர்கள் சங்கம் சிறப்பாக பணியாற்றி, நிஜாமின் கொடுமைகளுக்கெதிரான பிரச்சாரத்தைக் கொண்டு சென்றனர். ஆனால் 1944ல் இதன் செயல்பாடு நின்று

விட்டது. கம்யூனிஸ்டுகள் தலைமையில் ஆந்திர மகாசபை ஒரு வெகுஜன அமைப்பாக செயல்பட்டது. உறுப்பினர்கள் ஆயிரக் கணக்கில் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு சீட்டு வழங்கப்பட்டது. இதனால் அதற்கு 'சீட்டு சங்கம்' என்ற பெயரும் உண்டு. 'சீட்டு' இருந்தால் வெட்டி வேலை செய்ய மறுக்கலாம். வரி வசூல் செய்வோரை தண்டிக்கலாம் என்ற நிலை இருந்தது. சீட்டு இருந்ததால் 'முந்திரை' என்ற இடத்தில் லம்பாடிகளுக்கு சொந்தமான நிலத்தை சட்டவிரோதமாக நிலபிரபுக்கள் எடுத்துக் கொள்வதை தடுக்க முடிந்தது. அதேபோல நிலபிரபுக்களின் அடியாட்கள் சகாளி அயிலம்மாவின் நிலத்தில் அறுவடைக்குத் தயாராக இருந்த பயிரை வெட்டிவிடுவதாக மிரட்டியபோது பல நூற்றுக்கணக்கான தொண்டர் குழுக்கள் பயிரை அறுவடை செய்து அயிலம்மா வீட்டிற்கு கொண்டு சென்று, அதை பாதுகாக்கவும் செய்தனர். இதன்பின் கற்கள், கம்புகள் என போராட்ட வடிவம் மாறியது. பெண்கள் எதிரிகளை தாக்குவதற்கு கம்புகளுடன், மிளகாய் பொடியையும் பயன்படுத்தினர். அயிலம்மாவின் நிலத்தில் பயிர் செய்யும் உரிமை போராட்டம், ஆயுதம் தாங்கிய போராட்டத்தின் ஆரம்ப கட்டமாக விளங்கியது.

**ஆயுதம் தாங்கியப் போராட்டம்!**

1946 நவம்பரில் கிராமங்களில் குழுக்கள் அமைக்கப்பட்டு ஆயுதம் தாங்கியப் போராட்டம் நடத்த முடிவெடுக்கப்பட்டது. நிஜாம் அரசு நிலப்பிரபுக்களோடு சாதகமாக செயல்பட்டது.

1947ல் இந்தியா விடுதலை அடைந்த பின்னரும் விவசாயிகளின் கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவிடவில்லை. நிஜாம் இந்திய யூனியனுடன் இணைய மறுத்தது புதிய சூழலை உருவாக்கியது. இதையொட்டி கிராம பாதுகாப்பு குழுக்கள் அமைக்கப்பட்டன. ஒவ்வொரு குழுவிலும் மருத்துவர்கள், அரசியல் பிரச்சாரம் செய்வோரும் இருந்தனர். காவல்நிலையங்களிலிருந்தும், நிலபிரபுக்கள் வீடுகளிலிருந்தும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. கொரில்லா தாக்குதல்நடத்தப்பட்டது. 4000 கிராமங்களில் கிராம ராஜ்யம் அமைக்கப்பட்டு 'வெட்டி'முறை ஒழிக்கப்பட்டது. திருப்பித்தரப்படாத கடன்கள் ரத்து செய்யப்பட்டன. நிலங்கள் குத்தகைதாரர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

தெலுங்கானா போராட்டம் விவசாயிகளுக்கு நிறைய நன்மை களைப் பெற்றுத்தந்தது. நில விநியோகத்தின் மூலம் நிலம் கிடைத்த வர்கள் அதற்கு சொந்தக்காரர்களாகி விட்டனர். அதை உறுதி செய்யும் வகையில் குத்தகைதாரர் சட்டம் வந்தது. விவசாயிகளின் வாழ்க்கையில் இது ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது.



இந்தப் போராட்டம் பெண்களை நான்கு சுவர்களுக்கு வெளியே கொணர்ந்தது. வீராங்கனை லட்சம்மா கூறினார்: 'என் கணவருக்கு ரொம்ப பயம், ஆனால் நான் பயப்படவில்லை.சங்கத்தில் சேர்ந்து விட்டேன். தனி ஆளாக நாம் என்ன செய்ய முடியும்? தாடிக்கார அமீன் மோசமானவன். நிறைய பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டனர். நாங்கள் ஒன்றாகவே இருப்போம். யாராவது இறந்து விட்டால், குழந்தை பிறந்து விட்டது..இப்படி பொய் சொல்லி விட்டு ஒன்றாகவே இருப்போம்.' சங்கத்தின் நடவடிக்கைகளைப் பற்றி 'மூச்சுக் கூட விடமாட்டோம்.' பாலியல் கொடுமைகள் பற்றி விவரிக்க இயலாது. அப்படியும் அந்தப் பெண்கள் துணிச்சலுடன் போராடி யுள்ளனர். சங்கத்திற்கென தங்களது இளம் குழந்தைகளை விட்டு பிரிய நேர்ந்ததுண்டு. பெண்கள் ஆர்வத்துடன் வந்தபோதும், தொடர்ந்து அவர்களை ஊக்குவிக்க இயலவில்லை. பாதுகாப்பு பிரச்சனை காரணம் என்று கூறப்படுகிறது.

போராட்டம் முடிந்தவுடன் பெண்கள் தத்தம் வீடுகளுக்குச் செல்லு மாறு பணிக்கப்பட்டனர். 'போராட்டத்தின்போது கையில் ஆயுதம் ஏந்திவிட்டு, இப்போது வீட்டில் தையல் மிஷன் முன்பு உட்கார வேண்டுமா' என்று கேட்ட பெண்களும் உண்டு. அந்த அளவுக்கு இயக்கத்தில் அர்ப்பணித்துப் பெண்களின் வாழ்க்கை வரலாறு படித்து பயன்பெற வேண்டிய ஒன்றாகும். உணவு வழங்குவோர், செய்திகளைத் தெரிவிப்போர், ரகசியத்தொடர்புகளைப் பாதுகாப்போர் என தெலுங்கானா போராட்ட வீராங்கனைகளை சந்திப்போம்.

# 1. சேயைப் பிரிந்த தாய் - கமலம்மா

கமலம்மாவின் சொந்த ஊர் மணிக்கோட்டா தாலுக்காவில் உள்ள
மைநாலா என்ற சிறிய கிராமம். கமலம்மாவின் தாய், பாட்டி,
கொள்ளுப்பாட்டி என்று பல தலைமுறைகளாக அந்தக்குடும்பம்
ஜமீன்தார் குடும்பத்தில் கொத்தடிமைகளாக வேலை செய்து வந்த
குடும்பம்.கமலம்மா 'தெலகா' இனத்தைச் சேர்ந்தவர். இவர்கள்
குடும்பத்தில் யாருக்கும் திருமணம் என்பது நடக்கவில்லை.
கமலம்மாவின் கொள்ளுப்பாட்டி ஒரு பிராமண குடும்பத்திற்கு ஒரு
படி அரிசி மற்றும் ஒரு ரூபாய் பணத்திற்கு விற்கப்பட்டாள்.
கொள்ளுப்பாட்டி அந்த வீட்டில் அடிமையாகவே இருந்தாள். அந்த
நிலப்பிரபு குடும்பத்திலுள்ள ஆண்களுக்கு அவள் 'வைப்பாட்டி'
திருமணம் என்பது இல்லை. கமலம்மாவின் தந்தையும் திருமண
மானவர் அல்ல. அவர் அந்தக்குடும்பதிற்கு வரி வசூலிப்பவர்.
கமலம்மாவின் அம்மா வயது வந்தவுடன் கமலம்மாவின் தந்தைக்கு
'வைப்பாட்டி' ஆனாள். கமலம்மாவின் தந்தை குழந்தைகளை
நல்லமுறையில் பராமரித்து வந்தார். கமலம்மாவுக்கு பதினைந்து
வயதாகும் போது காலமானார்.

நிலப்பிரபுக்கள் வீடுகளில் அடிமையாக இருக்கும் பெண்கள்
திருமணமானவர்களாக இருக்கக்கூடாது. கன்னி கழியாத
பருவமடைந்த பெண்ணாக இருக்க வேண்டும். கமலம்மாவின் அக்கா
அவர் வேலை செய்து வந்த வீட்டு எஜமானி அம்மாளின் சொந்தக்
கார பையனால் பலாத்காரம் செய்யப்பட்டு, கர்ப்பமுற்றாள்., எந்தவித
மான நிவாரணமும் இன்றி அவள் இறந்து போனாள். கமலம்மாவுக்கு
எட்டு வயதிலேயே திருமணம் செய்விக்கப்பட்டது. வரதட்சணை
என்பதெல்லாம் கிடையாது. நன்கு தலைவாரி, தெருவில் செல்லும்
போது 'துரை' பார்த்துவிட்டால் அவ்வளவுதான். விடமாட்டார்கள்.
இளம்பெண்கள் 'துரைகளின்' இச்சைக்கு பலியாவதென்பது சர்வ
சாதாரணமாகவே இருந்து வந்தது. துரையை எதிர்த்தால் வாழ்க்கையே
நரகம்தான். அதைப்பற்றி வெளியே யாரிடமும் சொல்லக்கூடாது.
அப்படி வெளியே சொன்னதற்காக ஒரு பெண்ணை 'துரை' ஆட்களை
ஏவிவிட்டு கூட்டாக பலாத்காரம் செய்து கொடுமைப்படுத்தினார்.



நிஜாம் மன்னர் காலத்தில் பெண்களை பள்ளிக்கு அனுப்ப
மாட்டார்கள். ஆனால் கமலம்மாவின் தந்தை சற்று முற்போக்கான
வர் என்பதால் தன் குழந்தைகளை படிக்க வைத்தார். ஆங்கிலமோ,
இந்தியோ கற்றுத்தர மாட்டார்கள். தெலுங்கும், உருது மொழியும்
பயிற்றுவித்தனர்.

கமலம்மாவின் கணவன் குடும்பமும் அடிமை குடும்பம்தான்.. ஒரு
ரெட்டி குடும்பத்தில் வேலை செய்து வந்தனர். தாள முடியாத
கொடுமைக்கு ஆளாகிய காலத்தில்தான் தெலுங்கானா போராட்டம்
பற்றி கேள்விப்பட்டு, கமலம்மாவும் அவள் கணவனும் கம்யூனிஸ்ட்
கட்சியில் சேர்ந்தனர். கமலம்மாவின் அண்ணன்தான் முதலில்
இயக்கத்தில் சேர்ந்தார். அந்தக் கிராமத்தில் கிட்டத்தட்ட எட்டு
தோழர்கள் குடும்பங்கள் இருந்தன. நிஜாம் ஆட்சியின் கொடுமை
களை சொல்ல இயலாது. அந்தத் தோழர்களின் குடிசைகள் எரிந்து
சாம்பலாக்கப்பட்டன. அப்போது கமலம்மாவுக்கு வயது பதினாறு.
அவளுக்கு மூன்று மாத குழந்தை வேறு இருந்தது. அவள் கணவன்
மீதான தாக்குதல் தொடர்ந்தது. அவன் போராட்டத்திலிருப்பது
தெரிந்து போலீசார் கொடுமையும்கூட சேர்ந்தது. "ஒருபக்கம்
நிலப்பிரபுவின் அட்டகாசம், இன்னொரு பக்கம் போலீசாரின்
அட்டகாசம் கிராமங்களில் உள்ள வீடுகளை 'ரெய்டு' செய்வது,
குடிசைகளை எரிப்பது தினசரி தொடர்ந்தது.' எனக்கு அந்த சமயத்தில்
என் புருஷனோடு போவதைத் தவிர வேறு ஏதும் தோன்றவில்லை.
அதனால் நானும் கட்சியில் சேர்ந்தேன். எனது குழந்தையை என்
அப்பா பார்த்துக் கொண்டார்" என்று கமலம்மா தான் கட்சியில்
சேர்ந்ததை விவரிக்கிறார்.

கட்சியில் கமலம்மாவுக்கு எந்தமாதிரி வேலை கொடுக்கப்பட்டது?
கமலம்மாவுக்கு அருமையான குரல். அதனால் கதை சொல்வது,
பாடல்களை இயக்கக்கூட்டங்களில் பாடுவது என்று தனது கட்சிப்
பணியைத் துவங்கினார். சிறிது காலம் கழித்து பகுதிக்குழுக்களில்
சுற்றறிக்கை எழுத ஆரம்பித்தார். இயக்கம் நன்கு விரிவடைந்து
கொண்டிருந்தது. ஒவ்வொரு கிராமத்திலும் போலீஸ் முகாமிட்டது.
எனவே கட்சித்தோழர்கள் நடமாடுவது வெகுவாகக் குறைந்தது.
கலைக்குழு கிராமம் கிராமமாக சென்றது. 'கோயா' என்ற இனத்தவர்
நாகரிகம் என்பதே அறியாமலிருந்தனர். ஆண்கள் வெறும் கோவணம்
மட்டுமே அணிந்திருப்பர். பெண்களும் பெயருக்கு ஏதோ சிறு
துணியைச் சுற்றிக்கொண்டிருப்பர். அம்மக்களிடையே கட்சி வேலை
செய்து, அவர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்த முடிந்தது.
நிஜாம் அரசோ, காங்கிரஸ் கட்சியோ 'கோயா' இனத்தவர்களை
மனிதர்களாகவே நடத்தியதில்லை. கமலம்மா கலைக்குழு பணியுடன்
மருத்துவ வேலைகளையும் கற்றுக்கொண்டார். ஒரு டாக்டர்,

இயக்கத்தொண்டர்களுக்கு வகுப்புகள் எடுத்தார். முக்கால்வாசி நேரம் காடுகளைச் சுற்றியே இருந்தனர். தோழர்கள் ஒருநாள் வகுப்பெடுத்துக் கொண்டிருக்கும் போது கமலம்மாவின் குழந்தை அழ ஆரம்பித்து விட்டது. 'நான் புல்லைய்யா என்ற தோழரை அழைத்து எனது குழந்தையை எனது அண்ணியிடம் கொடுத்து விடச்சொன்னேன். அவருக்கு குழந்தை இல்லை. பால் குடித்துக் கொண்டிருந்த குழந்தை கஷ்டமாக இருந்தும், வேறு வழியே தோணவில்லை. யூனியன்ராணுவம் கம்யூனிஸ்ட்டுகளை வேட்டையாடத் தொடங்கியது. வேறு வழியில்லை. கம்யூனிஸ்ட்டுகள் காடுகளில் தலைமறைவாகினர்" என்றார் கமலம்மா. அவரது கணவர் தலைமறைவாகியவுடன், வெளியே இருந்தால் ராணுவத்தினரிடம் மாட்டிக் கொண்டால் கொல்லப்படுவார். எனவே அவரது கணவர் கூறியது போல் 'செத்தாலும், ஒன்றாக செத்து மடியலாம் என கணவருடன் காட்டிற்கு சென்று விட்டார்.

"ஆறு மாதங்கள் காடுகளில் சுற்றினேன். எனக்கு எனது மகனைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. கட்சியில் அனுமதி கேட்டேன். கிடைத்தது. நாங்கள் இருந்த பகுதிக்கு ராணுவம் முற்றுகை இடப் போகிறது என்ற தகவல் கிடைத்தவுடன், கட்சித்தலைவர்கள் அன்று இரவே நான் அங்கிருந்து கிளம்பவேண்டுமென வலியுறுத்தினர். விடிய விடிய நடந்தேன். அந்தக் காட்டுப்பகுதியில், ராணுவத்திடமிருந்து தப்பிய வேறு சிலரும் இருந்தனர். அப்படியே மேலும் ஒன்றரை ஆண்டுகள் கழிந்தன. நான் மீண்டும் கர்ப்பமுற்றேன். காங்கிரஸ் அரசு எந்த பாதுகாப்புமே இல்லாமல் மக்களுக்கு முகாம்கள் அமைத்துக் கொடுத்திருந்தது.. புதர்களுக்கு மத்தியில் குழந்தையை பெற்று 8 மாதம் வளர்த்தேன்."

கமலம்மா மீண்டும் கட்சிப்பணி செய்ய ஆரம்பித்தார். ஆனால் குழந்தை அவர் பணிக்குத் தடையாக இருந்தது. கட்சியின் பகுதிக்குழு தலைவர்கள் அவரை அழைத்து 'கமலம்மா நீ குழந்தையை யாரிடமாவது கொடுத்து விடு. இல்லையென்றால் உன் மகனோடு ஒரு கிராமத்துக்குச் சென்றுவிடு' எனக்கூறினார்கள். மேலும் 'ஆறு மாதக் குழந்தை என்பதால் அடிக்கடி அழும்,' அதனால் நாம் அனைவரும் மாட்டிக்கொள்வோம். ஒரு குழந்தையால் பல உயிர்களை இழக்க நேரிடும். தவிர நாம் ஒவ்வொருவரும் பல ஆயிரக் கணக்கானவர்க்கு உதவ வேண்டியுள்ளது. அதனால் நீ அவனை யாரிடமாவது கொடுத்து விடு. அல்லது நீ எங்காவது சென்று பிழைத்துக் கொள்' என்றனர்.

"என் கணவர் அப்பண்ணாவும் ஆலோசனை செய்ய அங்கே இல்லை எங்கேயும் தனியாக போக பயமாக இருந்தது. நீண்ட நேரம் யோசித்தேன். செத்தாலும் தோழர்களுடனேயே சாகலாம் என



முடிவெடுத்து என் குழந்தையை கொடுக்க தீர்மானித்தேன்" என் குழந்தை நல்ல நிறம். அதனால் 'கோயா' ஆதிவாசிகள் வாங்க மறுத்தனர். ஓம்கார் என்ற தோழர் குழந்தையின் கழுத்தில் ஒரு சீட்டில் அதை பார்த்துக் கொள்ள முடியாததால் இங்கே விட்டு விடுகிறோம் என எழுதி குழந்தையை விட்டு விடலாம் என்றார். எந்தத் தாயின் மனது இதற்கு ஒப்புதல் கொடுக்கும்? கடைசியில் என்னுடன் ஒரு தோழர் வந்தார். நிலக்கரி சுரங்கத்தில் வேலை பார்க்கும் ஒருவருக்கு மூன்று குழந்தைகள் பிறந்து இறந்து விட்டன. எனவே அவர் என் குழந்தையை எடுத்துக் கொள்ள சம்மதித்தார். அவர் கைகளில் குழந்தையை கொடுத்தேன். கண்ணிலிருந்து கண்ணீர் நிற்கவில்லை. 36 ஆண்டுகள் ஆகிவிட்டது. என் மகன் எங்கிருக்கிறான் என்று தெரியவில்லை.." என்றார் கமலம்மா... எப்பேர்ப்பட்ட தியாகம்?

திகாலா சத்யநாராயணராவ் என்பவர் தெலுங்கானா போராட்டத்தில் மக்களின் மகத்தான தியாகத்தைப் பற்றி பேசுகையில் கமலம்மாவை "பெண்களுக்கு முன்மாதிரியாக இருக்கின்ற பெண்-உன் குழந்தையை நினைத்து ஏன் வருத்தப்படுகிறாய்? உன் வாழ்க்கையே ஒரு வரலாறு" என்றார். கமலம்மா கூறுவது போல், எவ்வளவு ஆறுதல், தேறுதல் அளிக்கும் வார்த்தைகளைக் கூறினாலும், ஒருதாயின் கஷ்டம் அவளுக்குத்தானே தெரியும்?

கமலம்மாவுடன், ஏராளமான பெண்கள் கையில் ஆயுதமேந்தி போராடியுள்ளனர். வெங்கடம்மா என்கிற 'கோயா' இனப் பெண்ணைப் பற்றி கூறுகையில், ஒருகுழுத் தலைவியாக செயல்பட்டார் என்றும், ஆண்கள் போல் உடை அணிந்து வெங்கடம்மா எதிரிகளை 'கொரில்லா' தாக்குதல் மூலம் வீழ்த்துவார் என்றும் உணர்ச்சியோடு கமலம்மா பேசியுள்ளார்.

கமலம்மாவுக்கு, போராட்டத்திலிருந்து விலக வேண்டுமென கட்சி முடிவெடுத்ததில் வருத்தம். பல மாதங்களாக அரிசி, காய் என உணவைக்கூட காணாமல் ஒரு குவளை கஞ்சியைக் குடித்து போராடியவர்கள் எப்படி போராட்டத்திலிருந்து விலகுவது, கட்சித்தலைவர்கள் கட்சியின் முடிவை விளக்கிப் பேசினார்கள். "கட்சி 120 ரூபாய் பணமும், 2 காளை மாடுகளும் கொடுத்தது. என் கணவர் நக்சலைட்டுகளுடன் சேர்ந்து, போலீசாரிடம் அகப்பட்டுக்கொண்டு ஜெயிலுக்குச் சென்றார். குழந்தைகளைப் பராமரிக்க மிகவும் கஷ்டப்பட்டேன். பணம் பெரிதில்லை. வாழ்க்கையில் மனதிடமும், கொள்கைப்பிடிப்பும் தான் பெரிது. என்னிடம் அது உள்ளது. தற்போது என்னால் அலைய முடியவில்லை. ஆனால்... இன்னமும் கட்சியில்தான் இருக்கிறேன்." சேவை புரிந்து வாழ்க்கையை வரலாறாக மாற்றிய போராளி கமலம்மாவின் வாழ்க்கையில் நாம் கற்றுக் கொள்ள வேண்டியது ஏராளம், ஏராளம்.

## 2. தீரத்துடன் போராடிய தயானி பிரியம்வதா

தெலுங்கானா போராட்ட வீராங்கனைகளில் பிரியம்வதா முக்கியமானவர். அவரது தந்தை ராமகிருஷ்ணா ரெட்டிக்கு இரண்டு மனைவிகள். அந்தக் கிராமத்திலுள்ள பள்ளியில் நாலாவது வகுப்புவரை தான் படிக்க இயலும் என்பதால் பிரியம்வதாவும் அவரது சகோதர, சகோதரிகளும் நான்காவது வரை தான் படிக்க முடிந்தது. மிகவும் கண்டிப்பான குடும்பம். அதிலும் குறிப்பாக தந்தை ராமகிருஷ்ண ரெட்டி கோபக்காரர். இருப்பினும் பிரியம்வதாவும் அவரது சகோதரரும் வீட்டைவிட்டு வெளியேறி கம்யூனிஸ்ட் கட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்கத் தொடங்கினர். அவர்களுக்கு வீடு திரும்பவே பயம். பதினைந்தே வயதான பிரியம்வதா தனது உறவினருடன் வீடு திரும்பினார். அவரது தந்தை சிறிது கோபப்பட்டாலும், அவரது அணுகுமுறை மாறியிருந்தது.

பிரியம்வதாவின் சகோதரர் பொங்கிர் பகுதியில் கட்சி அமைப்பாளராக செயல்பட்டார். பிரியம்வதா தனது அண்ணியுடன் சேர்ந்து எல்லாக் கூட்டங்களிலும் கலந்து கொண்டதுடன் அங்கிருந்த பள்ளியில் பணியாற்றினார். கம்யூனிஸ்டுகளைக் கண்டாலே பயம். எனவே யாரேனும் கம்யூனிஸ்டுகளுக்கு உதவி செய்தால் கூட பிரச்சனை ஏற்படும். அப்போது, பெண்களுக்குப் பயிற்சி அளித்து, அவர்களை கட்சி வேலைகளை செய்ய வைப்பது உதவியாக இருக்குமெனக் கருதி, கட்சி பெண்களை பயிற்றுவித்தது. வீடு, வீடாகச்சென்று குடும்பப் பிரச்சனைகள், கூலிப்பிரச்சனை, வீட்டை சுத்தமாக வைத்துக் கொள்வது என பலவற்றைப் பேசினார்கள். அறுவடை வேலைக்கு கிட்டத்தட்ட ஒரு கிலோ தானியம் கூலியாகக் கொடுக்கப்பட்டது.

### தற்காப்புப் பயிற்சி

கட்சி பெண்களுக்கு அளித்த பயிற்சி பற்றி பிரியம்வதா கூறுகிறார்: "எங்களுக்கு விஜயவாடாவில் பயிற்சி அளிக்கப்பட்டது. தைரியமாக இருப்பதுடன், ரஜாக்கர்கள் எங்கள் வீடுகளை சூறையாட வரும்போது, எப்படி எதிர்ப்பது சமாளிப்பது என்றும் கற்றுக் கொடுக்கப்பட்டது. கட்சியின் மறைவிடங்கள் பற்றிய தகவல்களை எப்படி ரகசியமாக



வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் தெரிந்து கொண்டோம். தேவைப்பட்டால் பயன்படுத்துவதற்கென மிளகாய்ப்பொடியை வைத்திருப்போம். சாப்பிட்ட மீதி உணவில் விஷத்தை கலந்து வைத்து விடுவோம்".

ரஜாக்கர்கள் நகைகளை கொள்ளையடிப்பதுடன், கையில் கிடைக்கும் உணவை சாப்பிடுவார்கள்.

பெண்கள் முன்னேற கல்வி அவசியம் என்பதால் எழுத படிக்க சொல்லி கொடுக்கப்பட்டாலும், நிறைய ஆண்கள் தங்கள் வீட்டுப் பெண்கள் படிப்பதை விரும்பவில்லை. ஒவ்வொரு தெருவிலும் குழு கூட்டங்கள் நடைபெறும்,பெண்கள் முன்னேற்றம் பற்றி பேசப்படும். பிரியம்வதா பெண்கள் மத்தியில் ஓராண்டு காலம் பணியாற்றினார்.

அடக்குமுறை காலத்தில் பிரியம்வதா தலைமறைவாக ஒரு விதவை வீட்டில்தங்கினார். மற்றவர்களுக்கு சந்தேகம் ஏற்படாத வண்ணம் கட்சியுடன் தொடர்புடைய குடும்பங்களுடன் பல்வேறு விஷயங்களை விவாதிப்பார். விவசாயிகள் அதிக கூலி கேட்கவேண்டும் என்றும் குழந்தைகளுக்கு பாலூட்ட வேலையிலிருந்து சிலமணி நேரம் ஓய்வு எடுத்துக்கொள்வது, விவசாயிகளின் உரிமை என்பதையும் அவர்களுக்கு விளக்கினார்.

நில உரிமையாளர்கள் பெண்களை தங்கள் குழந்தைகளை கவனித்துக் கொள்வதற்கென வீட்டிற்கு அனுப்ப மாட்டார்கள்.

### என் குழந்தை இல்லை

அடக்குமுறை அதிகரித்தவுடன், தோழர்களை பாதுகாப்பாக தங்க வைப்பதற்காக கட்சி குடும்பங்களை தயார் செய்ய வேண்டியிருந்தது. போலீஸ் தாக்குதலை சமாளிக்க சொல்லிக் கொடுக்க வேண்டியிருந்தது. ஐந்து மாதங்கள் வரை தாக்குதலை சமாளித்தனர். பிரியம்வதாவின் தந்தையை போலீசார் துன்புறுத்தினர். 'என்றைக்கு என் குழந்தைகள் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார்களோ, அன்றே அவர்கள் என் குழந்தைகள் இல்லை' என பிரியம்வதாவின் தந்தை கூறினார். அவருக்கு காங்கிரஸ் கட்சியுடன் தொடர்பிருந்தும் அவர் தாக்கப்பட்டார். அடக்குமுறை அதிகரிக்க, அதிகரிக்க கட்சிக்கு தொடர்புள்ள குடும்பங்களால் நிலைமையை சமாளிக்க முடியவில்லை.

அடக்குமுறையைப் பற்றி பிரியம்வதா விவரிக்கிறார்: "எனது அண்ணிக்கு கைக்குழந்தை அதனால் கட்சி வேலை செய்ய என்னைத் தவிர வேறு பெண் அங்கு இல்லை. எனது பெற்றோரை பார்க்கச் சென்றபோது, எப்படியோ போலீசாருக்குத் தெரிந்து எங்களை கைது செய்தனர். சப் இன்ஸ்பெக்டர் நல்ல மாதிரி. எங்கள் கட்சியைப் பார்த்து அவருக்குப் பயம். எங்கள் குடும்பம் செல்வாக்கு

அதிகமுள்ளது என்பதால், போலீஸ்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.. இருப்பினும் நான் சன்ச்சல்குடா ஜெயிலில் மூன்று மாதம் அடைக்கப்பட்டேன். கட்சிக்கு உதவி செய்தவர்கள் எல்லோரும் ரொம்பவும் கொடுமைப்படுத்தப்பட்டனர். என்னை சோர்வடையச் செய்தனர். வேறொன்றும் அப்போது செய்யவில்லை. ஆனால் இரண்டாவது முறை கைது செய்யப்பட்டபோது என்னை செகந்தராபாத் ஜெயிலுக்கு கொண்டு சென்றனர். பின்னர் நலகொண்டா, கம்மம், வாரங்கல் என இடமாற்றம். எங்களுடன் பலரும் கைது செய்யப்பட்டனர். அவர்களில் எண்பது வயது மூதாட்டியும் இருந்தார். அவரது பேரன் கட்சியிலிருந்ததால், அதைப் பற்றிய தகவல்களைத் தர வேண்டுமென நகக்கணுவில் ஊசிகளை ஏற்றி துன்புறுத்தியுள்ளனர். அவ்வளவு கொடுமைக்குப் பின் தன் பேரனைப்பற்றி ஏதும் சொல்லவில்லை. நாங்கள் 400 பேர் சிறையிலிருந்தோம். சாப்பாடு மிகவும் மோசமாக இருக்கும். அதை எதிர்த்தோம், என்னையும், கமலா தேவியையும் அவுரங்காபாத் ஜெயிலுக்கு அழைத்து போனார்கள். ஒருவருஷம் அந்த ஜெயிலில் இருந்த பின்பு விடுதலையானோம். போராட்டம் முடிந்த பின் கட்சி எந்த வேலையும் கொடுக்கவில்லை. நாங்கள் வீடு திரும்பினோம்".

தனிப்பட்ட முறையில் பிரியம்வதா போராட்ட காலத்தில் நிறையப் பிரச்சனைகளை சந்தித்திருக்கிறார். ஒரு தோழரை இவர் காதலித்திருக்கிறார். போராட்டம் முடிந்தவுடன் அவருடனான தொடர்பற்றுப் போனது. பின்னர் கல்யாணமே செய்து கொள்ளவில்லை. போராட்டம் முடியும் வரை காத்திருக்கும்படி கட்சி கூறியது. வீட்டிலும் எந்த ஆதரவும் கிடையாது. இதைப்பற்றிக் குறிப்பிடும்போது 'உலகத்தில் எல்லோருமே கல்யாணம் பண்ணிக் கொள்கிறார்களா என்ன? நான் அவரை விரும்பினேன். இழந்தேன். அதற்காக வருத்தப்படவில்லை. எல்லாம் கெட்ட கனவு.' போராட்டத்திற்கு பின்பும் கட்சியில் தீவிரமாக பணியாற்ற வாய்ப்பு இருந்திருந்தால் மனதிருப்தி கிடைத்திருக்கும். ஆனால் அது நடக்கவில்லை. ஆனாலும் கட்சியில் சேர்ந்ததால் எவ்வளவு கற்றுக் கொண்டேன். கட்சியில் சேருவதற்கு முன்பு எதுவுமே தெரியாது. கட்சி பல பிரச்சனைகளை எதிர்கொள்ளும் மன திடத்தை அளித்தது. பொதுக்கூட்டங்களில் பேச நம்பிக்கை அளித்தது. பலரும் குறிப்பாக காங்கிரஸ்காரர்கள் நாங்கள் பேசுவதை பார்த்து நாங்கள் பி.ஏ, எம்.ஏ படித்தவர்களா என வியப்பதுண்டு. கட்சியில் வேலை செய்து விட்டு வீடு திரும்பும்போது எங்களை எங்கள் வீட்டைச் சேர்ந்தவர்கள் தாழ்வாகப் பார்த்தாலும், அதை தாங்கிக் கொள்ளும் சக்தியை கட்சி அளித்தது. சமுதாயத்தை, அதன் கொடுமைகளை நன்கு புரிந்து கொள்ள கட்சி உதவியது. கட்சியை நம்பி வந்தோம், எங்களிடம்



எந்த ஆண் தோழரும் தவறாக நடந்து கொண்டது இல்லை. ஒரு தடவை பொங்கிரைச் சேர்ந்த ஒரு பெண்ணின் கணவர் ஜெயிலில் இருக்கும்போது அவள் கர்ப்பமாகி விட்டாள். அதற்கு காரணம் யார் என்றெல்லாம் கேள்வி கேட்டு, அவளை துன்புறுத்தாமல் கட்சி அப்பெண்ணுக்கு ஆதரவளித்தது. அவளது கணவன் ஜெயிலிலிருந்து திரும்பிய பின், இருவரும் மகிழ்ச்சியாகவே குடும்பம் நடத்தினர். நல்லவேளையாக, கட்சியில் அப்பெண்ணின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு செயல்படுபவர்கள் இருந்தனர். கட்சிக்கு பெண்கள் பிரச்சனைகள் பற்றிய தெளிவான பார்வை இல்லை. வீட்டு வேலைகளை ஆண்கள் பகிர்ந்து கொள்ளவில்லை. விவசாயப் பெண்கள கணவருடன் வாழ்வது பிடிக்கவில்லையெனில் தங்கள் பெற்றோர் வீட்டிற்கு சென்று விடுவதுண்டு, அங்கு வேறொருவருடன் மீண்டும் கல்யாணமாகி, கணவனுடன் சேர்ந்து வாழ இயலாத நிலை ஏற்படுவதென்பது சகஜம்". பெண்களை கட்சியில் கொண்டு வருவதற்கும், வலுவாக செயல்படுவதற்கும் வாய்ப்புகள் இருந்தும், அவற்றை கட்சி கூடுதலாக பயன்படுத்திக் கொள்ளவில்லையென்ற ஆதங்கம் பிரியம்வதாவுக்கு உண்டு. ஒவ்வொரு கிராமத்திலும் பெண்கள் போராட்டத்தில் இறங்கத் தயாராக இருந்தனர். அந்தக் காலத்தில் நல்லமுறையில் சமூக பணியாற்றியவர்களுக்கு நல்ல பெயர் இருந்தது. இன்று படித்த பெண்கள் நிறைய பேர் அரசியல் வேண்டாமென இருக்கின்றனர் என்ற கருத்தை பிரியம்வதா வெளிப்படுத்தியுள்ளார்.

தெலுங்கானா போராட்டத்தின்போது விதைக்கப்பட்ட வீர விதைகள் இன்று, இடதுசாரி இயக்கமென்ற பெரும் விருட்சமாக வளர்ந்துள்ளது. பிரியம்வதா எந்த நோக்கத்துடன் போராடினாரோ, அந்த நோக்கம் நிச்சயம் ஒருநாள் நிறைவேறும். ஆண், பெண் சமத்துவம் மலரத்தான் செய்யும்!

# 3. சலவைத்தொழிலாளி அயிலம்மா

தெலுங்கானா போராட்டத்தில் தனக்கென சிறப்பான இடத்தை பிடித்தவர்தான் அயிலம்மா! சாதாரண சலவைத்தொழிலாளி குடும்பத்தைச் சேர்ந்தவர். சித்யால அயிலம்மாவைத் தெரியாதவர்களே அந்தப்பகுதியில் இல்லையென கூறுமளவுக்கு பிரபலமான பெண்மணி.

**குண்டர்களை எதிர்த்து!**

விஸ்னூர் ராமசந்திர ரெட்டி மிகப்பெரிய நிலப்பிரபு. அவரது மகன் பாபுராவ் விவசாயிகளையும், கூலிகளையும் அடித்து, துன்புறுத்துவதில் பெயர் போனவன்.மரத்தில் கட்டி வைத்து தனக்கு வேண்டாதவர்களை குருவியைச் சுடுவதுபோல் சுட்டுக்கொல்வான். கிட்டத்தட்ட எட்டு வருடங்கள் ஜமீந்தாரையும், அவனது குண்டர்களையும் எதிர்த்து அயிலம்மா போராடி இருக்கிறார். ராமசந்திர ரெட்டியுடன் நிலப்பிரச்சனையில் நேரில் மோதி இருக்கிறார். எத்தனை நீதிமன்றங்களுக்கு நடையாய் நடந்து போராடினார். மனஉறுதியுடன் போராடி கடைசியில் வெற்றியும் பெற்றார்.

அன்றைய அரசும், போலீசும், ஜமீந்தாரிடம் 'கைக்கூலி' பெற்றுக் கொண்டு போராளிகளை நசுக்கிய காலம் அது. ராமசந்திர ரெட்டி போன்ற பணபலம், ஆட்கள் பலம் வாய்ந்த ஒருவரை எதிர்ப்பதை கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாது. ஆனால் ஒரு சலவையாளர் குடும்பத்தைச் சேர்ந்த அயிலம்மா தனது 9 ஏக்கர் நஞ்சை நிலத்தை பாதுகாக்க துணிவுடன் போராடினார். அயிலம்மாவின் மீது மட்டுமின்றி, அவளது குடும்பத்தினர் மீதும் குண்டர்கள் தாக்குதல் தொடுத்தனர். அயரவில்லை அயிலம்மா! தன் போராட்டத்தை தொடர்ந்தார். உரிமையை விட்டு கொடுக்காமல் குரலெழுப்பினார்.

**கட்சியின் உதவி**

அயிலம்மாவின் அயராத போராட்டதிற்கு நலகொண்டா மாவட்ட விவசாயிகள் இயக்கமும், கம்யூனிஸ்ட் கட்சியும் பக்கபலமாக, உறுதுணையாக நின்றன என்றால் மிகையாகாது. அந்த மாவட்ட இயக்கத்தலைவர்களான நரசிம்ம ரெட்டி, யாதகிரிராவ், வெங்கடேஸ்வர ராவ் என கட்சித்தோழர்கள் அயிலம்மாவின் குடும்பத்திற்கு துணையாக வந்து, பயிரை அறுவடை செய்து, வீட்டில் சேர்த்தார்கள். போலீஸ்காரர்கள் கோபமுற்று, அவர்களை ஜமீந்தார்



மாளிகையில் வைத்து எழுத முடியாத அளவுக்கு சித்திரவதை செய்தனர்.

**குடும்பத்தின் ஆதரவு**

"நான் சங்க வேலைகளுக்காக வெளியே செல்லும்போது, எனது மகன்கள்தான் வீட்டைப் பார்த்துக் கொள்வார்கள். எனது மகளும், மருமகளும் உதவி செய்வார்கள். மிலிட்டரி தாக்குதல் நடத்தப்பட்ட போது, எனது குழந்தைகள் என் சகோதரன் வீட்டில் ஒளிந்து கொண்டனர். வீட்டிலுள்ள அனைத்துப் பொருட்களையும் களவாடிக் கொண்டு போய் விட்டனர்".

ஜெயிலுக்குப் போனவர்கள் திரும்பி வந்தால் வீடு எப்படி இருந்தது? அயிலம்மா பாடுகிறார்:

எங்கள் வளையல்கள் உடைக்கப்பட்டன<br>
எங்கள் பானைகள் உடைக்கப்பட்டன<br>
சமைப்பதற்கு பானைகள் இல்லை...<br>
ஏன் குடிநீர் வைக்கக்கூட பானைகள் இல்லை...'

ஜமீந்தாரின் அடியாட்கள் அயிலம்மாவின் வயலையே அழிக்க ஆரம்பித்த போது அவளது கணவனும், பிள்ளைகளும் அவர்களை அடித்துவிட்டனர். அதனால் ஜமீந்தார் அவர்களை சித்திரவதை செய்து, சிறைக்கு அனுப்பினார். ஒவ்வொரு கோர்ட்டாக, தனியாக ஏறி இறங்கினார் அயிலம்மா. குடும்பத்தினர் சிறையில் இருந்தனர். ஜமீந்தாரின் ஆட்கள் அயிலம்மாவைத் துன்புறுத்தினர். ஆனால் அவர் மனம் தளரவில்லை.

அயிலம்மாவின் கணவனும், மகன்களும் சிறையிலிருந்து வந்தபின் கட்சியின் போராட்டக்குழுவில் சேர்ந்தார். தலைமறைவாக இருந்த தோழர்களுக்கு உணவளித்து, அவர்களை பாதுகாத்தனர்.

இன்று ?

"எனது பிள்ளைகளுக்கு கல்யாணம் ஆகிவிட்டது. எனது பேரன் தான் கிராம பஞ்சாயத்து, தலைவர், எனது குடும்பமே கட்சிக்குடும்பம். இன்று ஏழைகள் பற்றி யார் கவலைப்படுகின்றனர்? ஆயுதம் தாங்கி போராடினோம். சங்கம் என்பது ஏழைகளுக்கானது, சங்கத்தை நினைத் தாலே பெருமையாக உள்ளது. என் கணவர் அடிவாங்கியே செத்தார்.

என்னை பாலநாகம்மா என்று கூப்பிடுவார்கள். என்னைப் பற்றி நிறையப் பாடல்கள் எழுதப்பட்டுள்ளன. எனது மகள் சோமு நரசம்மா பலாத்காரம் செய்யப்பட்டாள். அதனால் எனது மருமகன் அவளை ஏற்றுக்கொள்ள மறுத்தான். சங்கத்தால் கூட இதில் ஏதும் செய்ய முடியவில்லை. "நிச்சயமாக ஒரு புதிய சமுதாயம் அமையும் என்று சங்கம் ஏற்படுத்திய கனவு இன்னமும் அகலவில்லை" என்றார்.

# 4. சாலம்மா என்ற சிங்கம்

ஒரு சிங்கத்தைப் போல, தெலுங்கானா போராட்டத்தில் வீரத்துடன் போராடிய வீராங்கனைதான் சாலம்மா. தற்போது ஏழ்மையில் வாடுகிறார். ஆனால் பேச்சில் இன்னமும் வேகம் இருக்கிறது. அக்கிராஜபள்ளி, பைரம்பள்ளி, கோபராலுபள்ளி, மட்டுரு, சலாகபுரம், பொத்தரெட்டிபள்ளி, அம்மாபுரம் ... என சாலம்மாவின் கால்கள் செல்லாத இடமில்லை. தன்னம்பிக்கை, மனஉறுதி இரண்டும் சாலம்மாவுக்கு அதிகமாகவே இருந்தது. ஷாபுரத்திலிருந்து போராட்டத்தில் பங்கேற்க சென்ற ஒரே பெண் சாலம்மாதான்.

சாலம்மாவின் இளமைப்பருவம் எப்படி இருந்தது? அவரே கூறுகிறார்: "நான் பார்க்க அழகாகவே இருப்பேன். ஆரோக்கிய மாகவும் இருப்பேன். நான் நிறைய படிக்கவில்லை. மாடு மேய்ப்பேன். ஆனால் ஒரு கம்யூனிஸ்ட்டுக்குத் தேவையான மனஉறுதி எனக்கு இருந்தது. சங்கத்திற்காக உழைத்து, உயிரையே கூட வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்ற எண்ணம் இருந்தது. நான் இந்த இயக்கத்தில் இருந்ததால் எனது உறவினர்களுக்கும் நிறைய பாதிப்பு இருந்தது. எனது சகோதரனை கஜாமாபாத் சிறைக்குக் கொண்டு சென்று அடித்தே கொன்றார்கள்".

## போராட்டமே வாழ்க்கை

"எனது குடும்பம் வசதியானதுதான். எனது குழந்தையோடு நான் இருந்தபோதுதான் போலீசார் என்னை பிடிக்க வந்தார்கள். நாங்கள் இருந்த பகுதியை போலீசார் சூழ்ந்து கொண்டனர். அப்போதெல்லாம் மின்சாரம் கிடையாது. போலீசார் கையில் சிக்கினால் நரகத்துக்குப் போவதற்குச் சமம்".

போராட்டத்தில் பங்கேற்றால் எனக்கு நிம்மதி கிடைக்கும். ஒருகையில் குழந்தை, மறுகையில் ஒரு செம்பில் தண்ணீர் வைத்துக் கொண்டு அப்படியே வீட்டை திறந்து போட்டுவிட்டு கிளம்பினேன். அங்கே ஒரு ஏழை 'மடிகா' குடும்பம். அவர்கள் வீட்டு மதில் சுவரை ஏறி குதித்து தப்பினேன். அங்கே சாணி தட்டி வைத்திருந்தார்கள். என்னுடைய நல்ல புடவையைஅவிழ்த்து விட்டு, பழைய புடவையைக்



கட்டிக்கொண்டேன். 'விராட்டி'யால் என்னை மூடி வைத்தார்கள். போலீஸ்காரார்கள் தேடி விட்டு, 'இந்த... பிடிக்க முடியாது. தப்பி போய்விட்டாள்' என்று சொல்லி விட்டு போய்விட்டார்கள். அன்று மாலையே ரஜாக்கர்கள் வந்தனர், நான் சோளக்காட்டினுள் ஒளிந்து கொண்டிருந்தேன். காவலுக்கு வந்த ரஜாக்கர்கள் 'அவள் இங்கேதான் ஒளிந்து கொண்டிருக்க வேண்டும்'. 'மடிகா' வீட்டில் இருக்க வேண்டும். பெட்ரோலை வைத்து அந்த வீட்டையெல்லாம் கொளுத்துங்கள் என்றார்கள். அசிங்கமாக என்னை திட்டினார்கள். அதையெல்லாம் கேட்டுக் கொண்டு அங்கே ஒளிந்து கொண்டிருந்த நான் அவர்கள் போனபின்பு வெளியே சென்றேன். கட்சிக்கு நான் சுட்டுக் கொல்லப்பட்டேன் என்ற தகவல் போயுள்ளது. அதைக்கேட்டு துப்பாக்கி சகிதம் தோழர்கள் வந்தனர். பின்பு அவர்களுடன் சென்று விட்டேன் என மன உறுதியால் கஷ்டத்தை சமாளித்தேன்.

'காட்டில் தங்கி இருந்தபோது ரொம்பவும் தைரியமாக இருக்க வேண்டியிருந்தது. ஒரு வருஷம் காட்டில் தங்கிய போது வேளாவேளைக்கு உணவு கிடைக்காது.'

சாலம்மா தனது மகனை பார்த்து 2 வருஷங்கள் ஆகி விட்டன. குழந்தையைப் பார்க்க வேண்டுமென மனம் பதைத்தது. கடைசியில் வீட்டிற்குத் திரும்புவதாக சொல்லிவிட்டு சாலம்மா தனது சகோதரனுடன் சென்றாள்.

## போலீசிடம் அகப்பட்டாரா?

ஆம்! வீடு திரும்பிய அவர் சாப்பிட்டுக் கொண்டிருந்த போதே போலீசார் சாலம்மாவை வளைத்துப் பிடித்தனர். அவரது கைகளிரண்டையும் பின்புறம் கட்டி அங்கிருந்த மரத்தோடு கட்டி விட்டனர். கால்களையும் கட்டினார்கள். சாலம்மாவின் பெற்றோர், கூடப்பிறந்தோர் அத்தனை பேரும் அங்கே இருந்தனர். "சவுக்கினால் என்னைப் பலமுறை அடித்தனர். கிட்டத்தட்ட 300 போலீஸ்காரர்கள் இருந்தனர். அதற்குப் பிறகு என்னை ஒரு ஜமீன்தாரின் மாளிகைக்கு கொண்டு சென்றனர். அங்கேயும் என்னைக் கட்டி வைத்து அடித்தனர். ரத்தம் பீறிட்டு வந்தது. ரயிலில் பயன்படுத்தும் நிலக்கரியை வைத்து ரத்தப்போக்கு கட்டுப்படுத்தப்பட்டது. இன்னமும் எவ்வளவு தழும்பு பாருங்கள். நான் மீண்டும் தலைமறைவாகினால் எனது பெற்றோர் உறவினர் அனைவரும் ஜெயிலுக்குப் போகத் தயார் என எழுதி கையெழுத்துப் போட்டுக் கொடுத்தனர். அதற்கு பின்பு என்னை வீடு திரும்ப அனுமதித்தனர். இந்தச் சம்பவத்திற்கு பிறகு 'துட்டெங்கிரெய்யா' கொலை செய்யப்பட்டார். நான் தான் அதற்கு காரணம் என அவரது மனைவி சத்யம்மா புலம்பினார். மீண்டும் மிலிட்டரி போலீஸ் என்னை பிடித்துச்சென்று சித்திரவதை செய்தனர்.

நிறைய துன்பப்பட்டு விட்டேன். இன்று மருமகள்கள் வந்து விட்டனர். யாரிடமும் எனது கதையை கூறவும்இல்லை. எவ்வளவோ போராடிய எனக்கு இன்று நடமாடக் கூட முடியவில்லை' என்று சாலம்மா தனது கஷ்டத்தை விவரித்தார். எத்தனை சாலம்மாக்கள் இப்படி போராடினார்களோ!

குழந்தையை சுமந்து கொண்டு கட்சி வேலையை செய்தபோது தோழர்களின் உதவி நிறைய கிடைத்ததென அவர் குறிப்பிட்டார். கட்சித்தோழர்கள் எல்லோருமே சமையல் செய்வார்கள். அதைப்பற்றி சொல்லும்போது நான் ஒரு ஆண்பிள்ளையைப் போல வேட்டி, சட்டை போட்டு, தலையில் கர்சீப்பை மடித்து கட்டிக் கொண்டிருப்பேன். சமையல் செய்ததில்லை. ஒரு பெண் அந்த வேலையை செய்ய வேண்டுமா? மக்களுக்கு சேவை செய்ய வேண்டும். அதுதான் முக்கியம்.'

# 5. சக்கிலம் லலிதம்மா

கோத்தப்பள்ளி என்ற கிராமம், நிஜாமின் ஆதிக்கம் அதிகமாக இருந்த காலம். அங்கிருந்த தேஷ்முக் என்று அழைக்கப்படும் பிராமண குடும்பத்தைச் சேர்ந்தவர்தான் லலிதம்மா. பெண்கள் வீட்டை விடு வெளியே செல்ல முடியாத காலம் அது. லலிதாம்மா வுக்கு ஐந்து வயது சிறுமியாக இருந்தபோதே கல்யாணம் ஆகி விட்டது.

லலிதம்மாவின் கணவர் பள்ளிப்படிப்பு முடிந்ததுமே அரசியலில் ஈடுபட்டார். காந்திஜியின் இயக்கத்துடன் ஆரிய சமாஜத்தின் தாக்கமும் நிறையவே இருந்தது. சொந்தத்திலேயே திருமணம் என்பதால் மாமியார் கொடுமை கிடையாது. கணவன், அவரது வீட்டாரிடம் பயம் இல்லாமல் பழக முடிந்தது.

**கம்யூனிச இயக்கத்திடம் ஈர்ப்பு**

தேவுபள்ளி வெங்கடேஷ்வர ராவ் லலிதம்மாவின் உறவினர். கம்யூனிச புத்தகங்களை கொடுப்பது உலக வரைபடத்தின் மூலம் பல்வேறு விஷயங்களை சொல்லித்தருவது நேருவின் கடிதங்களை தெலுங்கில் மொழி பெயர்த்து படிக்க சொல்வது போன்றவற்றை செய்து வந்தார். நிஜாம் அரசு கொடுங்கோல் ஆட்சியை நடத்தியது. எனவே, சுலபமாக இயக்கங்களில் பங்கேற்பது என்பது இயலாத ஒன்று, இருப்பினும் லலிதம்மாவின் சகோதரரும், கணவரும் நிறைய ஆர்வத்தை தூண்டும் வகையில் செயல்பட்டனர்.

நலகொண்டா ஜில்லா கமிட்டியில் லலிதம்மா மட்டும் உறுப்பினராக இருந்தார். அங்கிருந்த மக்களை ஒன்று திரட்டி கூட்டங்களுக்கு வரச்சொல்லுவார். காந்தியின் மீது அப்போது மக்களுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை. ஒவ்வொரு வீட்டிலும் 'சர்க்கா' இருக்கும். நிஜாமுக்கு எதிரான ஜமீந்தாரி முறைக்கெதிரான போராட்டம் பின்னர் கம்யூனிஸ்ட் போராட்டமாக மாறியது.

**இயக்கப்பணி**

விஜயவாடாவில் தோழர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளிக்கப்பட்டது. மோட்டூரி உதயமும், ராஜேஸ்வர ராவும், சாவித்ரம்மாவும் பயிற்சி அளித்தனர். தற்காப்பு பற்றி சொல்லி கொடுக்கப்பட்டது. குண்டு வெடிக்கும்போதும், வீடு தீப்பற்றினாலும் என்ன செய்ய வேண்டுமென சொல்லி கொடுக்கப்பட்டது. இதைப்பற்றிக் கூறுகையில், "நான் பயிற்சியில் முதலில் சேர்ந்தேன். பின்னர் சுவராஜ்யம் சேர்ந்தார். நாங்கள் எல்லோரும் ஒன்றாக பேப்பர் படிப்போம். நான் உணவு போன்றவற்றில் நிறைய அட்ஜஸ்ட்'செய்து கொள்ள வேண்டி இருந்தது. நீச்சல் கற்றுக்கொண்டோம். பெண்கள் பொதுக்கூட்டங் களில் பெருமளவில் பங்கு பெற்றனர். விடுதலைப் பற்றி பாடுவோம். பெண்களுக்கு சொத்துரிமை, பேச்சுரிமை கோரி மனு எழுதுவோம். குழந்தை திருமணங்களை ஒழிக்கக் கோரியும், விதவை மறுமணத்தை ஆதரித்தும் எழுதுவோம். ரஷ்யப் புரட்சி பற்றி நிறைய படிப்போம், கார்க்கியின் தாய் புத்தகம் படிப்போம். எனது கணவனின் குடும்பத்தினரிடமிருந்து எதிர்ப்பு இல்லை".

**கம்யூனிஸ்டுகள் தீண்டத்தகாதவர்களா?**

லலிதம்மாவின் அத்தை மகனுக்கு கல்யாணம். அப்போது, லலிதம்மாவையும், அவரது கணவரையும் அழைத்திருந்தார்கள். அப்போது லலிதம்மா, 'எங்களை ஊரில் ஒதுக்கி வைத்துள்ளனர். அதனால் நாங்கள் வந்தால் யாரும் சாப்பிட மாட்டார்கள்' என்று கூறியும் வற்புறுத்தினார்கள். கடைசியில் லலிதம்மா சென்றபோது, என்ன நடந்ததென கூறுகிறார், 'நாங்கள் எல்லோரும் சாப்பிட உட்கார்ந்தோம். அங்கு வந்த மதகுருக்கள் எங்களுடன் சாப்பிட மறுத்து எழுந்து போய் விட்டனர். நான் 21 நாளான குழந்தையுடன் இருந்தேன். என்னை பிள்ளை பெற்றவள் என்பதால் சீக்கிரம் சாப்பிடச் சொன்னார்கள். எனக்கு சந்தேகம். அவர்கள் 'மடியாக (சுத்தமான) ஆடை அணிந்து பூட்டிய அறைக்குள் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அதை பார்த்ததும் எனக்கு கடுங்கோபம். நான் கத்திப் பேசினேன். ஏற்கனவே ரத்தக்கொதிப்பு இருந்த எனது அத்தை மயங்கி விழுந்தார். அதன்பிறகு அந்த வீட்டிற்குள் நுழையவில்லை. இதுபோல நிறைய சம்பவங்கள் நடந்ததுண்டு' என விவரித்தார்.

சிறிது காலம் சென்ற பின்பு தலைமறைவாக காட்டுக்குச் செல்ல வேண்டி இருந்தது. காட்டில் கூட்டம் போடுவதுண்டு. போலீஸ் அங்கும் வந்து விட்டது. திருமலராவை பிடிக்க வந்தார்கள்., திருமலராவ் ஒரு விவசாயி போல மாறுவேடமணிந்திருந்தார். ஒரு கிறிஸ்துவர் வீட்டில் இருந்தார். யேசுவின் பெயரால் திருமலராவ் வீட்டில் இல்லையென சத்தியம் செய்தார். (மதத்திற்கு அப்பாற்பட்டு



அன்று இயக்கத்திற்கு உதவி செய்துள்ளனர்). அங்கிருந்து தப்பிச் செல்லும்போது லலிதம்மாவுக்கு கடுமையான ஜுரம். அதோடு நீண்ட தூரம் நடக்க வேண்டி வந்தது. வண்டி வைக்க வேண்டுமென வற்புறுத்தியும் கேட்கவில்லை. போலீசாரிடம் மாட்டிக்கொண்டால் என்ன செய்வது என்ற பயம். அதனால் ஜுரத்துடன் மற்ற தோழர்களோடு நடந்தார்.

**குழந்தை சொன்ன சிவப்பு வணக்கம்(லால் சலாம்!)**

லலிதம்மா கம்மம் ஜில்லாவில் இருந்தபோது அவர் மீது அங்கிருந்தவர்களுக்கு சந்தேகம். போலீசுக்கு தகவல் சொல்லி விட்டனர். அன்று போலீஸ் அவரை கைது செய்ய வந்தது. இதைப் பற்றி விவரித்தபோது, "என் குழந்தைக்கு யார் வந்தாலும் 'லால் சலாம்(சிவப்பு வணக்கம்) சொல்ல வேண்டுமெனக் கூறியிருந்தேன். போலீஸ்காரர்கள் காக்கி உடையில் வரவும் அவர்களை என் மகள் தோழர்கள் என நினைத்து 'சிவப்பு வணக்கம்" என வரவேற்றாள். நான் எனது உறவினர் வீட்டிற்கு வந்துள்ளேன் என்று சொல்லி தப்பிக்க முயன்றேன். முடியவில்லை. கைது செய்யப்பட்டேன். என்னை சரமாரியாகக் கேள்வி கேட்டார்கள். நான் பதிலேதும் சொல்ல வில்லை. நான் என் கணவரின் பெயரைச் சொல்லாமல் எங்கள் குழுவிலுள்ள வேறொருவரின் பெயரைச் சொன்னேன். அவர்கள் நம்பவில்லை. என்னை சிறையிலடைத்தார்கள். யாரையும் என்னைப் பார்க்க அனுமதிக்கவில்லை. என்னுடன் சிறையிலிருந்த என் மகள் சுகவீனமானாள். கிட்டத்தட்ட 6 வருடங்கள் சிறையில். எனது குழந்தை சிறை வாழ்க்கைக்குப் பழகி விட்டாள். விடுதலையான பின் 2 மகன்கள் பிறந்தனர்" எனக் கூறினார்.

"ஒருமுறை என் அம்மா வீட்டுக்கு போனபோது, என்னை வெளியே உட்கார வைத்து சாப்பாடு போட்டார்கள். நான் சாப்பிட வில்லை. அதற்குப்பின் அங்கு போகவுமில்லை. என் கணவரும் அங்கே போக வேண்டாமென சொல்லிவிட்டார். இரண்டு வருஷங்கள் அங்கு போகமலிருந்தோம்".

லலிதம்மாவின் வீடு ரஜாக்கர்களால் சூறையாடப்பட்டது. போராட்ட முடிவில் கணவரின் உறவினர்கள் வந்து தங்கினர். இந்தி கற்றுக்கொண்டு ஒவ்வொரு தேர்வாக எழுதினார். முறையான கல்வி என்பது இல்லை. சுயகல்விதான். தற்போது இந்தி பண்டிட்டாக பணி புரிகிறார். சுயமுயற்சிதான் காரணம் என்றும் தெரிவிக்கிறார். இளவயதிலேயே இயக்கத்தில் ஈடுபட்ட லலிதம்மா வசதியான குடும்பத்துப் பெண்களும், தெலுங்கானா போராட்டத்தில் தம் பங்கை செலுத்தினர் என்பதற்கு ஓர் உதாரணம் ஆவார்.

எனக்கு 14 வயதானபோது மகன் பிறந்தான். என் கணவர் சிறையிலிருந்தார். வேறு வழியின்றி என் அம்மாவின் வீட்டிற்கு செல்லும் நிலை ஏற்பட்டது. என்மகன் நான்கு மாத குழந்தையாக இருந்தபோது செத்துவிட்டான். நான் அங்கு போவதற்கு முன்பு என் அம்மாவும் வீட்டில் மற்றவர்களும் நான் 'பிராயச்சித்தம்' செய்ய வேண்டும் அப்போதுதான் சுத்தமாவேன் என்றனர். அதாவது தங்க கம்பியை பழுக்கக் காய்ச்சி நாக்கில் சூடு வைப்பார்கள். இதற்கு 'உவுலா' என்று பெயர்! நான் இதை செய்து கொள்ள மறுத்தால் என் பெற்றோர் செத்து விடுவதாகக் கூறினார்கள். என் கணவரோ சிறையில் எனக்கு வேறு எந்த ஆதரவும் இல்லை. வேறு வழியின்றி ஒத்துக்கொண்டேன். பின்னர் என்கணவரிடம் இதைச் சொன்ன போது ரொம்பவும் கோபப்பட்டார். என் பிறந்த வீட்டிற்கே அனுப்ப மறுத்தார்."

# 6. மக்கள் கலைஞர் கோடீஸ்வரம்மா

கொண்டப்பள்ளி கோடீஸ்வரம்மாவுக்கு ஆங்கிலேயருக்கு எதிரான பாடல்களை கேட்டுக் கேட்டு, நாட்டுப்பற்று அதிகரித்தது. தனது பத்தாவது வயதில் காங்கிரஸ் கட்சி கூட்டங்களில் தேசபக்திப் பாடல்களைப் பாடுவார், காங்கிரஸ் கட்சியிலிருந்த சோஷலிச கருத்துகளைக் கொண்டவர்கள் வெளியேறி காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியைத் துவக்கினர். இதுவே பின்னர் கம்யூனிஸ்ட் கட்சியாக மாறியது.

**திருமணமும், இயக்கமும்**

கட்சிக்குள் பணியாற்றியவர்கள் ஒருவரை ஒருவர் விரும்பி திருமணம் செய்து கொள்வதுண்டு. அப்படித்தான் கோடீஸ்வரம் மாவும், தோழரைத் திருமணம் செய்து கொண்டார். மே தினக்கூட்டம் முதல் அனைத்து முக்கிய நிகழ்ச்சிகளிலும் பெண்கள் பெருமளவு கலந்து கொள்வார்கள். ஊர்வலங்களும், பொதுக்கூட்டங்களும் நடைபெறும். பொதுக்கூட்டங்களில் பாட்டு பாடுவது வழக்கம். மக்கள் சங்கங்கள் அமைக்கப்பட வேண்டுமென்ற தேவையில் அடிப்படையில் மாதர் சங்கம் அமைக்கப்பட்டது. பெரும்பாலும் பெண்களின் பிரச்சனைகள் முன் வைக்கப்பட்டன. மாறிவரும் சமுதாயச் சூழலுக் கேற்ப பெண்களைப் பற்றிய பார்வையும் எப்படி மாற வேண்டுமென்ற புரிதலை ஏற்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சியின் முயற்சியால் கலை நிகழ்ச்சிகள் நிறைய நடத்தப்பட்டன. வங்காளம் ஒரு முன் மாதிரியாக அமைந்தது. ரவீந்திரநாத் தாகூரின் பேத்தி நிறைய நாடகங்களில் நடிப்பார். ஆண்களே முன்பெல்லாம் பெண் வேடம் தரிப்பார்கள். ஆனால் அது சரியல்ல என உணர்த்தி, பெண்களே பெண் வேடங்களில் நடிக்க ஆரம்பித்தனர். இதைப் பற்றி கோடீஸ்வரம்மா கூறுகையில், "நாடகத்தில் நடித்தால் மற்றவர்கள் என்ன சொல்வார்களோ என்ற பயம் இருந்தது.' வேறு யாரோ ஒரு ஆண்பிள்ளையை கணவன் என்று எப்படி நடிப்பது? ஆனால் கொஞ்சம் கொஞ்சமாக பயம் தெளிந்து, நன்கு நடிக்க ஆரம்பித்த பிறகு நல்ல வரவேற்பு இருந்தது. முற்போக்கான

கருத்துகளைக் கொண்ட நாடகங்களை நடத்தினோம். கட்சியே ஒரு குடும்பம் போல இருந்தது'.

**இட மாற்றம்**

பின்னர் கட்சி பலவீனமாக இருந்த பல தாலுகாக்களுக்கு கோடீஸ்வரம்மா சென்று பணியாற்றியுள்ளார். பெரும்பாலும் பத்திரிகை தொடர்பான வேலைகளை தான் செய்து வந்தார். ரஷ்ய புரட்சிப் பற்றி நிறைய தகவல்கள் வந்து கொண்டிருந்த சமயம் அது. பத்திரிகைகளை பெண் தோழர்கள் போட்டிப் போட்டுக்கொண்டு விற்பனை செய்வார்கள். ரயில்வே ஸ்டேஷனில் விற்பனை செய்யும்போது தெரிந்தவர்கள் கோடீஸ்வரம்மாவைப் பார்த்து 'வெயிலே படாமல் இதுநாள் வரை இருந்துவிட்டு, இப்படி வெயிலில் அலையும்படி என்ன கஷ்டம் வந்தது? வசதியான குடும்பத்தில் பிறந்து விட்டு, இப்படி பத்திரிகை சந்தாவுக்கு அலைய வேண்டுமா?' என்று கேட்பதுண்டு. இருபது நாட்களுக்கு ஒருமுறை கட்சித் தோழர்கள் கூடி செய்த வேலைகளை பரிசிலனை செய்வது வழக்கம். அரசியல் வகுப்புகளும் தொடர்ந்து நடப்பதுண்டு. மார்க்சியத் தத்துவத்தைப் புரிந்து கொண்டு தோழர்கள் செயல்பட்டனர்.

தவிர்க்க முடியாத சூழலில், தெலுங்கானா போராட்டத்தைக் கைவிட வேண்டுமென கட்சி தலைமை முடிவு செய்தது. "எங்களுக்கெல்லாம் வருத்தமாகத்தான் இருந்தது. போராட்டம் முடிந்தவுடன் பழைய வாழ்க்கைக்கு திரும்ப வேண்டுமே!" அசாதாரண உறுதி, அறிவியல் தெளிவு, சிறந்த கலைகள் என்று கோடீஸ்வரம்மா, ஒரு கோடீஸ்வரம்மாவாகப் பிறந்து, வளர்ந்து, கம்யூனிச இயக்கதிற்கும், தெலுங்கானா போராட்டத்திற்கும் வலுவூட்டியவர். மார்க்சியத்தை நன்கு கற்றுத் தேர்ந்தவர். கட்சிக்காக பல தியாகங்களை செய்தவர். இவரது வாழ்க்கை நமக்கொரு பாடம்.

> "தாபி தர்மராவின் மருமகள். பிராமணக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தாலும், ஒரு வயதான கிழவனுக்கு திருமணம் செய்து வைக்கிறார்கள் என்னும்போது, கம்யூனிஸ்ட் கட்சியிடம் அழுது கொண்டே சென்றாள். அந்தப் பெண்ணை கவலைப்பட வேண்டா மெனக் கூறி, கட்சி கம்யூனில் வைத்திருந்தோம். அதன் பின்னர் அவள் கட்சியின் கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்றாள். பின்பு தர்மராவின் மகன் மோகன்ராவுக்கு அவளுடன் திருமணம் நடந்து முடிந்தது. இதுபோல பல இடங்களில் நடந்தது. இந்தத் திருமணத் திற்குப் பிறகுதான் கம்யூனிஸ்டுகளை கல்யாணம் செய்து கொண்டா லும் தனது பெண்கள் சந்தோஷமாக வாழ முடியுமென்பதை பெற்றோர் புரிந்து கொண்டனர்."

# 7. சுகுணம்மா

"எனக்கு அப்போது ஒன்பது வயது. என் அக்கா என்னை விட மூன்று வயது பெரியவள். என் உறவினர் பையனைத் தவிர ஆண்கள் கிடையாது. என் அம்மாதான் அந்தப் பையனை வளர்த்தார். என் அக்காவுக்கு 12 வயதாகும்போது தற்காப்பு பயிற்சி தரப்பட்டது. சந்திர சாவித்திரி, டாக்டர் அச்சமம்பா, குமாராராஜ் அச்சமம்பா ஒரு ஆசிரியை தவிர வேறு சிலர், அவர்கள் பெயர் நினைவில்லை- என ஒருமாத காலம் தற்காப்பு பயிற்சி அளிக்கப்பட்டது. தெலுங்கானாவிலிருந்து சுவராஜ்யம், எங்கள் கிராமத்திலிருந்து என் அக்கா, பீபி நகரிலிருந்து ஒரு ஆசிரியை பயிற்சி பெற்றனர். அப்போது சில பள்ளிகளே இருந்தன. பெண் ஆசிரியர்களை பார்ப்பதே அபூர்வம். ஒரு டீச்சர் எல்லாக் கூட்டங்களுக்கும் வருவார். அவர் ஒரு விதவை. குழந்தை கிடையாது. எங்களுக்கு அவர் மேல் நிறைய மரியாதை உண்டு. பீபி நகரை காசிம் ரஸ்வியின் தலைமையில் ரஜாக்கர்கள் தாக்கிய போது அந்த டீச்சர் பலாத்காரம் செய்யப் பட்டார். பின்னர் இறந்து விட்டார்".

**பெண்ணாக பிறந்தால்**

பெண்ணாக இருப்பதால் குடும்பத்தில் ஒதுக்கப்படுவதை உணர்ந்து வெளியேற நினைத்தேன். தற்காப்பு கலையை கற்க விரும்பினேன். என் அம்மாவுக்கும் வீட்டில் சுதந்திரம் கிடையாது. அத்தை வைத்ததுதான் சட்டம். என் ஒன்றுவிட்ட சகோதரன் பெண்கள் படிக்க வேண்டும், கூட்டங்களுக்கு செல்ல வேண்டும் என்ற முற்போக்கான சிந்தனைகளைக் கொண்டிருந்தான். அந்தக் காலத்தில் ஜமீன்தார் வீட்டிலுள்ள சிறிய பெண்கள் கூட உறவினர் முன்பு வரமாட்டார்கள். வண்டியில்தான் நாங்கள் செல்ல வேண்டும். இருப்பினும் பள்ளியில் கபடி உள்ளிட்ட விளையாட்டுகளை பசங்களோடு விளையாடுவோம்.

பயிற்சி முடிந்து ஆறு மாதங்கள் கழித்து பொங்கீரில் பிரம்மாண்டமான கூட்டம் நடைபெற்றது. வண்டி கட்டிக்கொண்டு, நாங்கள் அனைவரும் அதில் கலந்து கொண்டோம். தான்யா, ஸோயா,

ஜான்சி, வங்க கதை மற்றும் பலவற்றை பற்றி 'புர்ராகதா' என்ற பாடல், கதை நிகழ்ச்சிகளை நடத்தினோம். வயதுக்கு வந்ததும் வெளியே செல்ல அனுமதி இல்லை.

எனது சகோதரன் கம்மம் சென்றிருந்தபோது என் அக்காவை இரண்டாந்தரமாக திருமணம் செய்ய நிச்சயித்தனர். ஊர் திரும்பிய என் சகோதரன் அதைக் கடுமையாக எதிர்த்தான். அக்காவை அழைத்து அந்தத் திருமணத்திற்கு சம்மதம் இல்லையென அனைவரின் முன்பும் சொல்ல வைத்தான். அந்தக் காலத்தில் அதை நினைத்துக் கூட பார்க்க முடியாது. அதற்குப் பின் ஒரே மாதத்தில் ஆந்திர மஹா சபாவில் பணியாற்றியவருக்கு திருமணம் செய்து வைத்தான். எங்களுக்கு அவன் மேல் நம்பிக்கை வந்தது. அவன் வெளியே வேலை செய்வதுடன், வீட்டிலும் பொறுப்பாக நடந்து கொண்டான்.

என்னை ஹைதராபாத்திற்கு அனுப்பி படிக்க வைக்க விரும்பினான். அவனை கைது செய்ய வாரண்ட் பிறப்பிக்கப் பட்டிருந்தது. இரவு நேரங்களில் வீட்டிற்கு வருவான். எங்கள் ஊரில் பள்ளிக்கூடம் இல்லை என்பதால் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் மரம் போன்றவற்றை சேகரித்து, எல்லோரும் உழைப்பு தானம் செய்து 'தர்ம ஷாலா' என்ற பள்ளியை அவன் கட்டினான். இந்தியும், ஆங்கிலமும் கற்பித்தான். உருது எங்கள் அனைவருக்குமே நன்றாகத் தெரியும். என் சகோதரன் தலைமறைவாக போக வேண்டியிருந்தது. ரஜாக்கர்கள் கிராமங்களைத் தாக்கினர். இந்துக்களை பிடித்து அடிப்பது, கொல்வது என ரஜாக்கர்களின் அராஜகம் தொடர்ந்தது. நகைகளை கொள்ளையடிப்பது, பெண்களை பலாத்காரம் செய்வது என்ற நிலையில் பெண்கள் வெளியே செல்ல இயலவில்லை. எங்கள் கிராமம் தாக்கப்படும் என்ற நிலையில், நாங்கள் வீட்டிற்குள் இருந்தால் ஆபத்து என உணர்ந்தோம். பீபி நகர் தாக்குதலுக்குப்பின் ரஜாக்கர்கள் சென்று விட்டனர். பீபி நகரில் நடந்தது எங்கு வேண்டுமானாலும் நடக்கலாம்.

கிராமங்களில் குழுக்கள் அமைத்து, வெளியே பாதுகாப்புக்கென காவலர்களை நியமித்தோம். யாராவது வருவது தெரிந்தால் முரசு அடிப்பார்கள். அனைவரும் கூடி விடுவோம். எல்லாப் பகுதிகளிலும் அரிவாள், கோடாரி ஆகியனவற்றை வைத்துக் கொண்டிருப்போம். ஆந்திர மகாசபை உறுப்பினராக இருந்தோம். அதன் கூடவே, விவசாயத் தொழிலாளர் மற்றும் வாலிபர் சங்க உறுப்பினர்களாகவும் இருந்தோம். அந்தக் கிராமத்திலேயே எங்கள் வீடுதான் நன்றாக இருக்கும். என் அப்பா போலீஸ்காரராகவும், கிராமத்து கிளார்க்காகவும் இருந்தார். தசரா பண்டிகையின்போது ஆயுதபூஜை நடைபெறும். ஆடு வெட்டி, துப்பாக்கியால் சுடுவார்கள். குழுக்கள் வந்து துப்பாக்கிகளை எடுத்துச் சென்று விடுவார்கள். அவை ரஜாக்கர்களுக்கு எதிராக பயன்படுத்தப்படும். எங்கள் கிராமத்தில் 'வெட்டி'களாக இருந்த 'மடிகா' இனத்தவரை மனிதர்களாக நடத்துவதில்லை என உணர்ந்தோம். ஒரு மாற்றம் வேண்டுமென நினைத்து கிராமத் தலைவர்களின் பிடியிலிருந்து விடுபடும் வண்ணம், அது தொடர்பான கோப்புகளை கொடுத்து விட்டோம்.



முதலில் குழுவில் இருந்த வெங்கட ரெட்டி என்பவர் பின்னர் ரஜாக்கர்களுடன் சேர்ந்து விட்டான். என் சகோதரனைப் பற்றி என் அப்பாவிடம் விசாரித்தார்கள். அவர் என்று அவன் வீட்டை விட்டு சென்றானோ, அவன் என் மகன் அல்ல என்று கூறி விட்டார். என் அப்பாவை அவர்கள் அடிப்பார்கள் என நினைத்தோம். போலீஸ் துரத்துவதைப் பார்த்து அருகிலிருந்த ஒரு இடையர் குடிசைக்குள் குதித்து விட்டேன். அந்தக் குடும்பத்தினர் என்னிடம் உடை மாற்றும்படி கூறினர். இல்லையெனில் எதிரிகளிடம் மாட்டிக் கொள்வேன் என்றார்கள். ஒரு புடவையை வாங்கி இடையர் வீட்டுப் பெண்ணைப் போலக் கட்டிக்கொண்டேன். அவர்கள் என்னைக் காப்பாற்றினார்கள். மறுநாள் என் சகோதரன் வந்து எங்கள் அனைவரையும் ஹைதராபாத்திற்கு அனுப்பி விட்டான். நகரில் நிலைமை மோசமாக இருந்தது. இந்துக்களும், முஸ்லிம்களும் பேசிக் கொள்ள மாட்டார்கள்.

நிஜாமை யூனியனில் சேரும்படி நேரு கூறினார். செப்டம்பர் 1948ல் போலீஸ் ஆக்ஷன் நடந்தது. நேரு ராணுவத்தை அனுப்பினார். மக்கள் தெனாலி, விஜயவாடாவுக்கு என பாதுகாப்பான ஊர்களுக்குச் சென்றுவிட்டனர். நலகொண்டா மாவட்டம் சீட்ட கொடுரு என்ற கிராமத்தில் லிங்கரெட்டி என்பவரை வைக்கோல் போரில் வைத்து கொளுத்தினார்கள். எங்கள் கிராமத்தில் லிங்கரெட்டி என்பவரை போரில் வைத்து கொளுத்தினார்கள். எங்கள் கிராமத்தை எரித்து விட்டார்கள். நாங்கள் தங்கியிருந்த வீட்டு சொந்தக்காரரை கொண்டு சென்றார்கள். அவருக்கு என்ன ஆகியது, கொல்லப்பட்டாரா என்று கூட எங்களுக்குத் தெரியாது.

நேருவின் காங்கிரஸ் அரசு ராணுவத்தை அனுப்பியது. பகல் நேரம் கட்சி பொதுக்கூட்டங்களில் இனி ஆயுதம் தேவையில்லை என என் சகோதரன் பேசினார். எங்கள் கிராமத்தில் தேசியக் கொடியும், செங்கொடியும் அருகருகே நட்டிருந்தனர். இரண்டு தினங்களில் காங்கிரசார் இரண்டு கட்சி அமைப்பாளர்களை கைது செய்தனர்.

இரண்டு வாரம் கழித்து நள்ளிரவில் கிட்டத்தட்ட மூவாயிரம் பேர் வந்தனர். இந்திய ராணுவத்தின் சீக்கிய படையினர் கிராமங்களை சூழ்ந்து கொண்டனர். எங்கள் வீட்டு கதவை தட்டியதும், அம்மா

கதவை திறந்தார். அவரைத் தாக்கினார்கள். என் சகோதரனைத் தேடினார்கள். இல்லையென்றதும் சென்று விட்டனர்.

எனக்கு பதினான்கு வயது ஆகியது. பள்ளி செல்லவில்லை. எப்பொழுதும் கட்சி புத்தகங்களை மட்டுமே படித்துக் கொண் டிருந்தேன். ரஷ்யப்புரட்சி பற்றி படிக்கும்படி அண்ணன் கூறுவான். வெளி உலகத்துடன் தொடர்பு இல்லை. கட்சியில் அனைவரும் தலைமறைவாக செல்வதென முடிவெடுத்தனர். நிறைய பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். நான் கட்சிக்காரர் களுக்கு கடிதங்கள், செய்திகள் கொண்டு செல்வேன். அவ்வாறு செல்லும்போது சீக்கியர்கள் தங்கியிருந்த பகுதியைத் தாண்டி சென்றேன். அது விடியற்காலை. சற்று பயமாக இருந்தது. இருந்தாலும் தைரியமாக சென்று வந்தேன். அவ்வப்போது காந்தா ரெட்டி துணைக்கு வருவதுண்டு. பின்னர் அவன் என் அண்ணனை காட்டிக் கொடுத்து, அண்ணன் கொலைக்கு காரணமாக இருந்தான். என் கையெழுத்து அழகாக இருக்கும். அதனால் செய்திகள் எழுதுவேன். என்னையும் கட்சி குழுவில் சேர்த்துக் கொண்ட போது மகிழ்ச்சி அடைந்தேன். ஆனால் வீட்டில் என்னைப் போன்ற, திருமணமாகாத இளம் பெண்கள் அப்படி கட்சி வேலை செய்வதை விரும்பவில்லை. என் அம்மா அழுதார். கட்சியில் சேர 16 வயதாகி இருக்க வேண்டும். ஆனால் நான் நன்றாக வேலை செய்ததால் நாராயண ரெட்டி, கமிட்டியில் பேசி 14 வயதில் கட்சிக்குழுவில் சேர்த்துக் கொண்டனர். சிலர் என்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்புவதாக கூறினர். ஆனால், நான் கட்சி வேலை செய்யும் ஆர்வத்தால், திருமணம் வேண்டாமென உறுதியுடனிருந்தேன். என் அண்ணன் சொல்வான் : 'நான் ஒரு நாள் செத்துவிடுவேன். நான் செத்தாலும் கட்சியில் உனக்கு நிறைய சகோதரர்கள் இருப்பார்கள். கட்சி, குடும்பம் போன்றது.' ஹனுமந்தய்யாவும் அதையேதான் சொல்வார். அதைச் சொல்லி ஒரு மாதத்தில் ஹனுமந்தய்யா சுட்டுக் கொல்லப்பட்டார்.

கம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்படுமென கனவு கண்டோம். ஒரே கம்யூனாக வாழ்ந்து விட்டு, தனியாக சென்று எப்படி வாழ்வது? பிரசாத் என்பவர் என்னை திருமணம் செய்ய விரும்பினார். எளிய முறையில் கட்சி திருமணமாக நடைபெற்றது. கட்சி கட்டுப்பாட்டில் நான் உறுதியாக இருந்தேன். அதனால் அதை மீறுபவர்கள் மீது எனக்கு கோபம் ஏற்பட்டது. திருமணமாகி ஓராண்டிற்குள் குழந்தை பிறந்தது. கட்சிக்குள் இரண்டுவித நிலைபாடுகள் இருந்தன. என் கணவர் கைது செய்யப்பட்டார். எனக்கு யாரும் தகவல் தரவில்லை. ஆனால் எனக்கு சந்தேகம் இருந்தது. கட்சி என்னை எங்கு அனுப்பினாலும் செல்லத் தயாராக இருந்தேன். வீட்டிற்குத் திரும்ப இஷ்டமில்லை.



கட்சி சிறிது காலம் என்னை பூனாவுக்கு அனுப்பி வைத்தது. பின்னர் மெட்ராசுக்கு அனுப்பினார்கள், என் கணவர் உயிருடன் இருந்தார் என்பது ஆறுதலான விஷயம். சுந்தரய்யா, பசவ புன்னையா ஆகியோர் என்னை வீடு திரும்பும்படிக் கூறினர். எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. இத்தனை நாட்கள் கட்சியிலிருந்து விட்டு, கம்யூன் வாழ்க்கையை விட்டு எப்படி வீடு திரும்புவது?

என்னைப் பொறுத்தவரை மகளிர் அமைப்புகளுக்கு அரசியல் தேவை. புரட்சிகரமான கட்டமைப்பு தேவை. 1968ல் ஹைதராபாத் வந்து விட்டேன். கணவரின் உடல் நலமும் பாதிக்கப்பட்டு விட்டது. மார்க்ஸ் ஏங்கெல்ஸ் லெனின் ஆகியோர் பெண்கள் பற்றி எழுதியுள்ளதையெல்லாம் படித்திருக்கிறேன். கார்க்கியின் 'தாய்' அனைத்து கட்சி உறுப்பினரும் படிக்க வேண்டும். நான் நிறைய படித்ததால், பெண்கள் பிரச்சனைகள் பற்றி சிந்திப்பேன். வீட்டிலும், நானும், என் கணவரும் நிறைய விவாதிப்போம். என் கணவர் சிறையிலிருந்த போது, இதுபற்றி அவருக்கு கடிதங்கள் எழுதுவேன்".

# 8. ரேகல்லா அச்சமாம்பா

கொல்ல சேர்லா கிராமத்தைச் சேர்ந்தவள் சுசீலா. ஏழை விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த பெண். அவளது தந்தை ஜக்காரெட்டிக்கு இருந்த துண்டு நிலத்தை நம்பிதான் குடும்பமே இருந்தது. அவளது தந்தை படிக்கவில்லை என்றாலும் தனது எட்டு குழந்தைகளும் நன்கு படிக்க வேண்டுமென விரும்பினார். வீட்டிலேயே ஒரு ஆசிரியரை தங்க வைத்து படிப்பு சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்தார்.

## போராட்டத்தின் துவக்கம்

நிஜாமுக்கு எதிராகப் போராட்டம் தொடங்கியபோது, நிறைய பெண்கள் தாமாகவே முன்வந்து அதில் பங்கேற்றனர். பாடல்கள் பாடுவதுஎன்பது பங்கேற்ற பெண்களை உற்சாகமூட்டுவதாக அமைந்தது. சுசிலாவும் தனது பதினான்காவது வயதில் போராட்டத்தில் பங்கேற்றாள். சுசிலாவிற்குப் பத்து வயதிலேயே திருமணம் நடந்தது. அவளும், அவளது கணவனுமாக சேர்ந்துதான் போராட்டக் களத்தில் குதித்தனர். அவளது கணவன் கைது செய்யப்பட்டவுடன், அவள் தனியாக என்ன செய்வதென புரியாமல் திகைத்தாள், ஆனால் தோழர்கள் ஆதரவு இருந்தது. கணவன் திரும்பி வருவான் என்று எதிர்பார்த்து ஏமாற்றமடைந்தாள்.

## ஆயுத பயிற்சி

'நாங்கள் எட்டு பேர் போராட்டத்தில் ஈடுபட்டோம். சிலரை கைது செய்தார்கள். புச்சம்மா என்ற பெண்ணை ஜெயிலிலேயே கொன்று விட்டார்கள். ஜெயிலில் அவள் போராடியதால் அவளை கொன்றார்கள். நாங்கள் அப்போது காட்டிலிருந்தோம். கூடிய சீக்கிரமாய் எங்களுக்கு ஆயுத பயிற்சி அளித்தார்கள். ராம்தாஸ் என்ற டாக்டர்தான் துப்பாக்கியை பயன்படுத்த பயிற்சி அளித்தார். பயிற்சியில் என்னோடு லலிதா, லட்சுமி சுவராஜ்யம் ஆகியோர் கலந்து கொண்டனர். மருத்துவ பயிற்சியும் ஓரளவு அளிக்கப்பட்டது. ஊசி போடுவது, காயங்களை சுத்தப்படுத்தி, மருந்து போடுவது போன்றவை சொல்லி கொடுக்கப்பட்டது. எனக்கு ஒரு டாக்டருடைய பொறுப்பு கொடுக்கப்பட்டது. என்னோடு உதவி செய்ய இரண்டு



தோழர்களை பாதுகாப்புக்காக மத்திய கமிட்டியால் அனுப்பப் பட்டார்கள். ஆண் தோழர்களோடுதான் குழுவாக வாழ்ந்தோம். எனக்கு நிறைய வேலை இருக்கும். துணி துவைப்பது, ரொட்டி செய்வது போன்ற பல வேலைகள். ஒருவர் சாதம் வேண்டும் என்பார். மற்றொருவர் சப்பாத்தி வேண்டுமென்பார். சாப்பாட்டு விஷயத் தினால் எங்களுக்குள் சிறுசிறு சண்டை சச்சரவுகள் ஏற்பட்டன. எப்படியோ சமாளித்தேன். அது பெரிய கதை. குழுவில் வேறு சில பிரச்சனைகளும் ஏற்பட்டன. எனக்கும் ஒரு ஆண் தோழருக்கும் உறவு என்று கதை கட்டப்பட்டேன். நான் அப்படிப்பட்ட பெண் இல்லை. என்னை சுட்டுக் கொல்லுங்கள் என்று கூறினேன். எனக்கு சாவதைப் பற்றி பயமில்லை. அப்படி இருந்திருந்தால் இதுபோன்ற இயக்கத்திற்கு வந்திருக்க மாட்டேன். என்னை வேறு ஒரு குழுவுக்கு மாற்றினார்கள். நான் எனது வேலையைத் தொடர்ந்து செய்தேன். எனது பெயர் அப்போது 'அச்சமாம்பா'. நான் செய்யாத தவறை செய்தேன் என்று ஒப்புக்கொள்ள திருமலாராவ் என்ற தோழர் வலியுறுத்தினார். மறுத்த என்னை கட்சியிலிருந்து நீக்கினார்கள். என்னைப் போலவே சுப்பாராவ் என்ற தோழரும் நீக்கம் செய்யப் பட்டார். கையில் காசு கிடையாது. என்ன செய்வது? அப்போதுதான லஷ்மி நரசய்யா என்ற தோழரை சந்தித்து முழு விவரங்களையும் சொன்னேன். ஒருவர் மீது குற்றம் சுமத்தினால் அவரை கண்காணிக் காமல் நீக்குவது, தவறு என்றார். ஒரு மாதம் சென்ற பின் மீண்டும் கட்சி உறுப்பினராக்கப் பட்டேன்.

## திம்மாபுரம் அனுபவம்

அச்சமாம்பா(சுசீலா) தனது மருத்துவ பணியைத் தொடர்ந்து செய்தார். போராட்டம் தீவிரமாக இருந்த சமயம் ஒரு நாள் காட்டில் தூங்கிக் கொண்டிருந்த போது போலீஸ் தாக்குதல் நடந்தது. எல்லோரும் தப்பித்து விட்டார்கள். மோஹன் ராவை விட்டுவிட்டு ஓடியதால் அவருக்கு என்ன ஆயிற்றென அச்சமாம்பாவுக்கு தெரியவில்லை. போலீசிடமிருந்து தப்பியபோது மோகன்ராவை மீண்டும் பார்த்து அவரை தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு நடந்தாள். அவருக்கு தண்ணீர் கொடுக்கக் கூட வழியில்லை. ஆனால் அச்சமாம்பாவுக்கு மரம் ஏறத்தெரியும். அருகிலிருந்த நெல்லி மரத்திலேறி அவற்றைப் பறித்து தோழர் மோஹனுக்கு கொடுத்தாள். போலீசாரிடமிருந்து தப்பி ஓடும்போது மருந்து பெட்டிகளிலிருந்த பை விழுந்து விட்டது கட்டிக் கொண்டிருந்த புடவையும் முட்களில் மாட்டி கிழிந்து போயிருந்தது. மோஹன் ராவ் ஒரே ஒரு பையில் சில குறிப்பேடுகள் வைத்திருந்தார். காடுகளின் மிருகங்களின் சத்தம் கேட்ட போதெல்லாம் பயமாக இருந்தபோதும், தைரியமாக போராட்டப் பயணத்தை அவர்கள் மேற்கொண்டனர், துப்பாக்கி

வெடிக்கும் சத்தம் கேட்கும் போதெல்லாம், போலீசை சந்திக்க தயாராக வேண்டிய கட்டாயம்.

கோயா இன மக்கள் உதவினார்கள். சாப்பாடு கிடைத்தது. அச்சமாம்பாவின் நிலைமையைப் பார்த்து வயதான அம்மா ஒருத்தி அழவே ஆரம்பித்து விட்டாள். அச்சமாம்பா அந்தப் பகுதி மக்களுக்கு மருத்துவ உதவி செய்ததால் அவர்கள் எல்லோரும் அவரை 'எர்ரக்கா (பெண் தெய்வம்)' என்றழைத்தார்கள். அங்கே ஒரு பெண்ணுக்குப் பிரசவம் பார்த்தார். அந்த மக்களுக்கு அவரை அங்கிருந்து அனுப்பவே இஷ்டமில்லை. இருந்தும் போலீசு வந்து விடுமென்ற பயத்தில் அனுப்ப சம்மதித்தனர். கோயா மக்களின் உணர்வைப் பற்றிக் கூறுகையில்: கோயா இன மக்கள் கூடை பின்னுவார்கள். அவற்றை பள்ளமான இடத்தில் மறைத்து வைத்து என்னை அந்தப் பள்ளத்தில் போட்டு விடுவார்கள். என்மீது கூடைகளைப் போட்டு விடுவார்கள். இப்படித்தான் போலீசிடமிருந்து என்னைக் காப்பாற்றினார்கள். தானியம் வைக்கும் ஆழமான அறைகளிலும் என்னை ஒளித்து வைத்திருப்பதாக சந்தேகித்து நான்கு பேரை போலீஸ் சுட்டுக்கொன்றது. நான் என்ன செய்வது? அங்கிருந்து கிளம்பினேன்' என அச்சமாம்பா தெரிவித்தார்.

போலீஸ் கிராமங்களுக்குத் தீ வைத்து சூறையாடியது. அச்சமாம்பா மீது உட்கார்ந்திருந்தபோது, சுற்றிலும் தீப்பற்றி எரிவதை பார்த்துக் கொண்டிருந்தார். போலீசிடம் மாட்டிக் கொள்வதை விட எரிந்து சாம்பலாவதே மேல் என எண்ணிய போது பக்கத்தில் நாகப்பாம்பு. அசைந்தால் கொத்திவிடும். அசையாது அப்படியே உட்கார்ந் திருந்தார். போலீஸ் போன பிறகு எர்ரக்கா என்ற அச்சமாம்பா அங்கிருந்து கிளம்பினார். மீண்டும் கட்சிக்குழுவிற்கு திரும்பினார். தீகலா சத்யநாராயணராவ் என்ற தோழர் அச்சமாம்பாவை அணுகி தனியாக இருக்க வேண்டுமென பிடிவாதம் பிடிக்காமல் யாராவது ஒரு தோழரை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற ஆலோசனையை வைத்ததுடன் மோஹன் ராவிடமும் இதுபற்றி பேசி இருவருக்கும் கல்யாணம் செய்து வைத்தார். சினிமாவில் வருவதுபோல் பல வருடங்களுக்குப் பிறகு அச்சமாம்பாவின் முதல் கணவர் சேஷய்யா விடுதலையாகி வந்தார். ஆனால் அச்சமாம்பா தன் இரண்டாவது கணவருடனேயே தங்கி விட்டார். சேஷய்யாவும் வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார்.

"நாங்கள் எப்போதுமே சாப்பாட்டை சமைக்கும்போது, நாங்கள் இருக்குமிடத்தை விட சற்று தொலைவிலேயேதான் செய்வோம். அன்று அப்படி சமைத்துக் கொண்டிருந்த போது, துப்பாக்கியுடன் போலீஸ் வந்தது. யார் உயிரோடுஇருப்போம்; யார் சாவோம்



எனத் தெரியாத நிலையில் நாங்கள் விருந்து சமைப்போம். சாதம் வெந்து விட்டதா என்று பார்க்கச் சென்ற என்மீது துப்பாக்கிச்சூடு. நல்லவேளை காது பிய்ந்ததோடு தப்பித்தேன். இன்னமும் எனக்கு அதனால் இந்தக் காது கேட்காது. நான் ஓடத் தொடங்கினேன். அவனும் என்னைத் தொடர்ந்து ஓடி வந்தான். ஆனால் சுடவில்லை. என்னை உயிரோடு பிடிக்க வேண்டுமென்பதால். நான் ஓடிய வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் போலீஸ்காரன் நின்று விட்டான்."

என்னிடமிருந்தது நான் கட்டியிருந்த பச்சை நிற சேலை மட்டுமே. அதுவும் கிழிந்து போய் முடிச்சுகள் போட்டு வைத்திருந்தேன். ஒன்றரை மாதம் அந்த ஒரே கிழிந்த புடவையுடன் காட்டில் மறைந்திருந்தேன். இதோடு மாதவிலக்கு வேறு, நான் பட்ட கஷ்டம் பிரம்மாவுக்குத்தான் தெரியும். அந்தப் பக்கம் போகும் ஆடு மேய்க்கும் சிறுவர்களிடம் கெஞ்சி கேட்டு துணி வாங்கிக் கொள்வேன். அப்பப்பா! என்ன கஷ்டம்! கட்சித் தோழர்கள் யாருமே காட்டில் அப்போது தென்படவில்லை. ஒருமாதம் கழித்து ஏரியா கமிட்டியை சென்றடைந்தேன்.

அச்சமாம்பாவின் சகோதர, சகோதரிகள் யாருமே இயக்கத்தில் ஈடுபடவில்லை. இவரால் இவரது குடும்பத்தினருக்கு போலீஸ் நிறைய தொல்லை கொடுத்தனர். தனக்குத் தெரிந்த மொழியான தெலுங்கை வைத்துக் கொண்டு சிறப்பாக மருத்துவ பணியாற்றிய சுசீலாவுக்கு அச்சமாம்பா என்ற பெயரை சூட்டியது கட்சிதான். 'அன்றைய நிலைமை ஒன்று வாழ்வு இல்லையேல் சாவு.'இன்று அப்படியில்லை. எங்கள் உயிரைப்பற்றி நாங்கள் கவலைப்பட்டதில்லை இப்போது தீவிரமாக அரசியலில் இல்லை. குடும்பமும் விவசாயமும் சரியாக உள்ளது என்கிறார் பிடிவாதத்துக்குப் பெயர் போன தோழர் அச்சமாம்பா. போராட்ட காலத்தில் இவரது பணி வியக்கத்தக்கது என்றால் அது மிகையாகாது.

# 9. மோட்டூரி உதயம்

உதயலஷ்மி 1924ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 13ஆம் தேதி சூரிய உதயத்தின்போது பிறந்தார். அதனால்தான் அவருக்கு உதயம் என்று பெயரிடப்பட்டது. உதயத்தின் தந்தை வெங்கைய்யாவுக்கு மூடநம்பிக்கை கிடையாது. அதனால்தான் பேய்கள் உலவுவதாக வதந்தி நிலவி வந்த கம்மவாரி பாலம் என்ற இடத்தில் கர்ப்பிணியாக இருந்த தன் மனைவியை அழைத்துச் சென்றார். அந்த இடத்திற்குப் போனால் யாருமே உயிருடன் இருக்க மாட்டார்கள் என்ற மூட நம்பிக்கையைப் போக்கும் விதத்தில் உதயம் அங்கேதான் பிறந்தார்.

உதயத்தின் தந்தை வெங்கையாவுக்கு 700 ஏக்கர் நிலமிருந்தது. தனது மகளை டாக்டராக்க நினைத்தார். ஆனால் உதயத்தின் மாமா, ஹனுமந்தராவ் என்ற பையனைப் பார்த்து நிச்சயம் செய்து விட்டார். உதயத்திற்குத் திருமணம் நடந்தது.

தெலுங்கானா போராட்டம் நடந்தபோது, அதில் தீவிரமாய் ஈடுபட்டிருந்த ஹனுமந்தராவ் விஜயவாடாவிலிருந்து சைக்கிளில் ஒரு நாள் வந்தார். சைக்கிளைப் பார்த்த போலீஸ்காரர்களுக்கு சந்தேகம். உதயத்தை விசாரித்த போது அது தன்னுடைய சைக்கிள் என்று கூறியதுடன் நில்லாமல் அதை ஓட்டியும் காண்பித்தார். அப்படியும் போலீஸ்காரர் கண்ணில் ஹனுமந்தராவ் பட்டுவிட்டார். ஹனுமந்த ராவை அடித்து, உதைத்துக் கைது செய்தனர். அன்று 300க்கும் மேற்பட்டவர்கள் கைதாகினர். நிறைய கம்யூனிஸ்டுகள் அந்தச் சமயத் தில் கொலை செய்யப்பட்டனர். மக்களும் கம்யூனிஸ்டுகளைக் கண்டு பயந்தனர்.

## கைதிகளின் குடும்பம்

கைது செய்யப்பட்டவர்களுடைய குடும்பங்களின் நிலை பரிதாபகரமானது. கட்சியிடம் காசு கேட்க முடியாது. பெண்கள் வேலை செய்துதான் தீர வேண்டுமென்ற நிலை! இதைப்பற்றி உதயம் கூறுகையில், 'ஒரு கம்பெனிக்கு வேலை செய்யப் போனோம். முதலாளி சரியில்லை. பின்பு ஒரு துணிக்கடைக்காரரை அணுகி அவருக்காக துணி விற்றுத்தருவதாக ஒப்புக்கொண்டோம். அவரது செலவு போக மீதியை கட்சிக்கு கொடுத்து விட வேண்டும் என்ற நிபந்தனையை விதித்தோம். ஒவ்வொரு கிராமமாகச் சென்று துணிகளை விற்றோம்.



கட்சிக் குடும்பங்களின் ஆதரவு நிறைய இருந்தது. குறைந்த விலையில் விற்றதால் சிலருக்கு நட்டம் ஏற்பட்டது. அதனால் அவர்களிட மிருந்து எங்களுக்கு மிரட்டல் வந்தது. கட்சிக் குடும்பத்தினர் உதவினார்கள்' என்றார்.

துணிக்கடை வேலைக்குப் பின் குண்டூருக்குச் சென்று நிலக்கரிகளை துண்டுகளாக்கும் கம்பெனியில் வேலை செய்தனர். அங்கே கம்யூனிஸ்டுகள் என்று தெரிந்து விட்டால் பிரச்சனையாகி விடும் என்ற நிலை. எனவே ரொம்பவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டி யிருந்தது. நல்ல புடவைகள் கூட உடுத்த முடியாது. ஆண்களுக்கு எட்டு ரூபாய் கூலி. பெண்களுக்கு ஐந்து ரூபாய் கூலி. மேலதிகாரி யிடம் ஏழைப்பெண்கள் என்று கூறித்தான் வேலை பார்த்தனர். அதனால், உதயம் மேஸ்திரியாக உயர்த்தப்பட்டார். கடினமான வேலை. நிலக்கரியை சுமந்து தலைமுடி உதிர்ந்து விட்டது. ஆனாலும் பிடிவாதமாக வேலை செய்தார்.

காங்கிரஸ்காரர்கள் இவர்களைப் பின் தொடர்ந்தபடியே இருந்தனர். கடைசியில் எப்படியோ உதயத்தை ஹனுமந்தராவின் மனைவி என்று கண்டு பிடித்து விட்டனர். மேலும் வேலை செய்த கம்பெனியின் அதிகாரிக்கு கடிதமெழுதினார்கள். 'உங்கள் கம்பெனியில் வேலை செய்யும் பெண்கள் கம்யூனிஸ்டுகள். இந்த நாட்டின் தேசத்துரோகிகள் உங்கள் கம்பெனியை நாசம் செய்து விடுவார்கள். அவர்களை உடனடியாக வேலையை விட்டு நீக்குங்கள் என காங்கிரஸ்காரர் சக்கானி வெங்கடரத்தினம் கடிதம் எழுதியதைத் தொடர்ந்து பெண்கள் வேலை இழந்தனர்'.

வேலை நீக்கம் செய்யப்பட்ட உதயமும், மற்ற பெண்களும் கடைசியில் பல்பொடி தயார் செய்யும் ஒரு கம்பெனியில் வேலைக்கு சேர்ந்தனர். ஏற்கனவே துணிக்கடைக்காரரிடம் கொடுத்து வைத்திருந்த பணம் மூவாயிரம் ரூபாயை வாங்கித் தோழர்களுக்காகச் செலவு செய்தனர். கடலூர் ஜெயிலில் இருந்த தோழர்களை பார்க்கப் போகும்போது ரொம்பவும் கஷ்டப்பட்டார்.

> "போராட்டம் எப்போது முடிவுறும் எனத் தெரியாது. அன்ன பூர்ணம்மாவையும், ஹனுமந்தய்யாம்மாவையும் பிடித்துக் கொண்டு போய் புளிய விளாரினால் அடித்து நொறுக்கினார்கள். சங்கேத மொழியில் ஜெயிலில் இருந்தவர்களுக்கு கடிதம் எழுதினோம். 'இங்கே வெயில் கடுமையாக உள்ளது. தாங்க முடியவில்லை! விவசாயிகள் நிலைமை ரொம்பவும் மோசம்.... இதை ஜெயிலில் இருந்த தோழர்கள் புரிந்து கொண்டனர்".

குழந்தை பிறக்கும்போது கணவன் ஜெயிலில் இருந்தார். அங்கு சென்ற பெண்களுக்கு தமிழ் தெரியாது. உதயத்தின் மகள் தான்யா

வுக்கு தமிழ் தெரியும். கைதிகளைப் பார்க்க தெரியும். கைதிகளைப் பார்க்க கொடுக்கும் நேரம் மிகவும் குறைவு. கடிதம் எழுதுவதுண்டு. அனைத்துத் தோழர்களும் அதை படிப்பார்கள். இதைப்பற்றி உதயம் கூறும்போது 'எனது லெட்டரை எல்லோரும் படிப்பார்கள். கவிதையாக என் உணர்வுகளை வடித்திருப்பேன். கடலூர் சிறையில் இருப்பவரே, உதயத்தின் இதயத்தில் இருப்பவரே என எழுதி இருந்தேன். ஜெயிலர் புதிதாக திருமணம் ஆனவர். என் கடிதத்தைப் படித்துவிட்டு எனக்கு சலுகைகள் தருவதாகக் கூறினார். ஆனால் எனக்குச் சலுகை தேவையில்லை. என்னைப் போல் கணவரைப் பிரிந்து எத்தனைப் பெண்கள் கஷ்டப்பட்டனர்" எனக் கூறி விட்டேன்.

"ஜெயிலில் இருப்பவர்களை சந்தித்து கட்சி கடிதங்களை கொடுக்க என்னென்ன தந்திரங்கள் செய்வோம் தெரியுமா? ஒரு தடவை கட்சி கடிதத்தை கொண்டு சேர்க்க வேண்டியிருந்தது. ஹனுமந்தராவ் வந்தவுடன் அவரைக் கட்டிப்பிடித்தேன். முத்தமிட்டேன். எல்லோரும் சிரிக்க ஆரம்பித்தனர். அதற்குள் அவர் கைகளில் கடிதத்தை திணித்து விட்டேன். அடுத்த தடவை ஒரு பெண்ணுக்கு நெஞ்சு வலி வந்தது போல் நடித்து கடிதத்தைக் கொடுத்தோம்".

உதயம் ஒரு பெண்ணைப் போல் தன்னை நினைத்துக் கொண்டதே இல்லை. ரவிக்கை அணியப் பிடிக்காது, மாறாக ஷர்ட்டு அணிவார். ஷூ, சாக்ஸ் போட்டுக் கொள்வார். சுவராஜ்யம் நன்றாகப் பாடுவார். உதயமும் மற்றவர்களும் கூட பாடுவார்கள். உதயம் 'ஆந்திர வனிதா' என்ற பத்திரிகையின் ஆசிரியராக பணி புரிந்துள்ளார். குழந்தைகளுக்காக 'பால பாரதம்' என்ற நூலை எழுதியுள்ளார். தவிர, மகளிர் இயக்கங்கள், தேசிய சங்கங்கள் பற்றியும் எழுதி இருக்கிறார். தெனாலியில் மகளிர் சங்க மாநாடு நடைபெற்றபோது, நடத்திய நாடகங்களை படம் பிடித்து, ரஷ்யர்கள் சிலர் ரஷ்யாவில் போட்டுக் காண்பித்தனர். 'மிட் வைஃப்' என்ற குறுநாடகம் கர்ப்பிணி ஒருத்திக்கு பிரசவம் பார்க்கும்போது சுத்தமான கருவிகளை பயன் படுத்தாத காரணத்தால் அந்தப்பெண் இறப்பதுதான் நாடகத்தின் சாராம்சம். இப்படி பாடல், நடனம், நாடகம் எனப்பல கலை நிகழ்ச்சிகளில் உதயம் பங்கேற்றிருக்கிறார்.

கட்சிக்கு ஒவ்வொரு சோதனையான கால கட்டத்திலும், நிதி திரட்டியும் விஷயங்களை சேர்த்துக் கொடுத்தும் தனது பங்கை செலுத்தி இருக்கிறார். அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் ஒப்பில்லாத் தலைவர்களில் உதயமும் ஒருவர். மனஉறுதியும், தைரியமும் உள்ளவர். தெலுங்கானா போராட்ட வீராங்கனைகளில் உதயத்திற்கு ஒரு தனி இடம் உண்டு. நமது இதயத்திலும்தான்!

# 10. ப்ரிஜ் ராணி கவுர்

ஹைதராபாத்திலுள்ள மிகவும் பின்தங்கிய குடும்பத்தைச் சேர்ந்தவர் ப்ரிஜ் ராணி கவுர். சரோஜினி நாயுடு பற்றி நிறைய படித்ததால், அவர் மீது அதீத மரியாதை உண்டு. அருணா ஆசப் அலியின் கூட்டங்களுக்குச் சென்றுள்ளார். ஆரிய சமாஜ கூட்டங்களிலும் இவருக்கு ஈடுபாடு இருந்தது. எங்கு கூட்டம் நடந்தாலும் அங்கு சென்று ஏதேனும் கற்றுக் கொள்ள வேண்டுமென்ற தணியாத தாகம் இவரிடம் இருந்தது.

ப்ரிஜ் ராணிக்கு சிறுமியாக இருந்த போதே திருமணம் நடந்து விட்டது. தன்னைச் சுற்றி என்ன நடைபெறுகிறது என்பதை புரிந்து கொள்ளுமுன்பே கணவன் வீட்டாரின் கொடுமைக்கு ஆளானார். கணவனின் அடி, உதை, மாமியாரின், திட்டு, அவச்சொல் ஆகியவற்றை தாங்கிக் கொள்ள முடியாமல் வீட்டை விட்டு ஓடிப் போய் விட்டாள்.

## மஹிளா மண்டலி

ப்ரிஜ் கவுருக்கு ருக்மணி என்ற தோழி மூலம் மஹிளா மண்டலியில் சேரும் வாய்ப்பு கிட்டியது. சமூக சேவை செய்யும் ஆர்வம் பிறந்தது. ஓரளவு கல்வியும் பயின்றார். அப்போதுதான் கம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடர்பு ஏற்பட்டது. ப்ரிஜ்ராணி அச்சமயம் இந்தி ஆசிரியையாக பணி புரிந்து கொண்டே கட்சி பணிகளையும் செய்து வந்தார். வீடு, வீடாகச் பி.சி.ஜோஷியின் கட்டுரையை எடுத்துச் சென்றார். நடிகை ஷபானா ஆஸ்மியின் தாய், ஆண்மி, ஜாப்ரி போன்ற முஸ்லிம் நண்பர்களும் வீட்டிற்கு வருவதுண்டு. ப்ரிஜ் ராணிக்கு முழு மூச்சுடன் அரசியலில் இறங்க அவா பிறந்தது.

## ரஜாக்கர்கள் பிடியில்

1946ல் ஹைதராபாத் இந்திய யூனியனில் இணையும் பிரச்சனை எழுந்தபோது, நிறைய தோழர்கள் கைதாகினர். பெண்களை அந்தப் போராட்டத்தில் முழுமையாக இறக்க கட்சி விரும்பவில்லை. ப்ரிஜ்ராணி தனது தாயின் வீட்டிற்கு சென்று விட்டார். அந்த ஊரிலிருந்த இளைஞர்களை ரஜாக்கர்களுக்கு எதிராக அணி

திரட்டினார். எதிரிகள் அப்பகுதிக்குள் வர இயலாதவாறு பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். பெண்கள் குழுக்கள் அமைக்கப்பட்டு இரவில் கூட காவலிருந்தனர். ஆகஸ்ட் 15ஆம் தேதி கொடியேற்ற வேண்டுமென்பது இவர்கள் திட்டம். கோஷாபேட் உயர்நிலைப் பள்ளியில் ப்ரிஜ்ராணி கொடியேற்றினார். பெண்கள் பூக்களைத் தூவிக்கொண்டு கோஷமிட்டவாறு சென்றபோது, அந்த பகுதியே விழாக்கோலம் பூண்டது போல இருந்தது. போலீஸ் வந்து சூழ்ந்து கொண்டனர். சங்கர் என்பவருடன் ப்ரிஜ் ராணி தப்பினார். உயிரோடு ரஜாக்கர்கள் கையில் சிக்குவதை விட இறப்பதே மேல் என நினைத்தனர். ஆனால் பின்னர், பீகம் பஜாரில் கொடி ஏற்றும்போது போலீசிடம் அகப்பட்டு கைது செய்யப்பட்டார். பல மாதங்கள் சிறையிலிருந்தார். விடுதலையான பின்பும் மீண்டும் கைதாகி விடுவோம் என்ற எண்ணத்தில் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டார்.

**சேயைப் பிரிந்து?**

ப்ரிஜ் ராணி தனது இரண்டு குழந்தைகளையும் பிரிந்து இருந்தார். அதனால் அவர்களை நினைத்தும் ரொம்பவும் துக்கமாக இருக்கும் என்றார். இவர் ஜெயிலில் இருக்கும்போது குழந்தைகள் ரொம்பவும் சின்னவர்கள்.. அத்தைதான் வளர்த்தார். போலீசுக்குத் தெரிந்தால் குழந்தைகளையும் தொல்லை செய்வார்கள் என்ற பயம்.

**தலைமறைவு வாழ்க்கை**

ப்ரிஜ் ராணி தனது தலைமறைவு வாழ்க்கையைப் பற்றி கூறுகையில்: "சைக்கிள் ஓட்டக் கற்றுக்கொண்டது ரொம்பப் பயனுள்ளதாக இருந்தது. அடிபட்டத் தோழரைப் பார்க்கச் சென்றபோது ரஜாக்கர்கள் கண்ணில் பட்டு விட்டேன். எப்படியோ தப்பித்து ஒரு பஸ்ஸில் ஏறினேன். தலைமறைவு வாழ்க்கை... எங்கேயோ தங்கி, எதையாவது, எப்போது கிடைக்கிறதோ, அப்போது சாப்பிட்டு உயிர் வாழ்ந்தோம். இரவு அசந்து தூங்க முடியாது. ஒருசிறிய சப்தம் கேட்டால் கூட முழித்துக் கொள்வோம். ஆனால் ஒரு குடும்பம் போல் ஒற்றுமையாக இருந்தோம். நிறைய படிப்பேன். கட்சியில் சேருமுன்பு பூஜை செய்வேன். கடவுள் நம்பிக்கை உண்டு. என் வாழ்க்கையில் நடந்த சில சம்பவங்கள் என் கடவுள் நம்பிக்கையை தகர்த்துவிட்டது. நிறையப் பெண்கள் வாழ்க்கையை சந்திக்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டனர். ஆனால் நான் தற்கொலை செய்து கொள்ள மாட்டேன்" என்றார்.

"கைதாகியதும் ரொம்பவும் கஷ்டப்பட்டேன். போலீஸ் லத்தியால் அடித்து என்னை நொறுக்கி விட்டனர். எனக்கு கோபம் தாங்கவில்லை. போலீசை திரும்ப அடித்தேன் (கைகளால்தான்).



இந்தச் செய்தி எல்லாப்பத்திரிகைகளிலும் வெளியாகியது. நான் அப்படி செய்வேன் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. எனக்கு மயக்கம் வந்துவிடும் நிலை. நீ என்ன பொம்பளை? உனக்கு எத்தனை புருஷன்கள்' என்றெல்லாம் கேட்டு திட்டி அடித்தார்கள். கட்சியிலிருந்து நான் விலக வேண்டும் என்றார்கள். நீங்கள் என்னை என்ன செய்தாலும் நான் ஒன்றும் சொல்ல மாட்டேன், கட்சியிலிருந்து ராஜினாமா செய்ய மாட்டேன் என்றேன். ஜெயிலில் ரொம்ப கொடுமைப்படுத்தினார்கள். நீண்ட நேரம் நிற்க வைப்பார்கள். மற்ற குற்றவாளிகளுடன் அடைக்கப்பட்டேன்.

**மீண்டும் திருமணம்**

1947ல் மீண்டும் ப்ரிஜ்ராணிக்கு கட்சியின் முன்முயற்சியால் திருமணம் நடைபெற்றது. கட்சிக்கு இவரது முதல் திருமணம் பற்றி முழுமையாகத் தெரியும். கட்சிக்கு முழு மூச்சுடன் பணிபுரிய திருமணம் ஒரு தடையாக இருக்குமென்ற கருத்து கட்சியில் உண்டு. திருமணம் செய்து கொள்ள வேண்டாமென கட்சி சுற்றறிக்கை அனுப்பியது கூட உண்டு.

**எட்டப்பன் புத்தி**

1951ல் தெலுங்கானா போராட்டத்தை நிறுத்துவது என முடிவு செய்யப்பட்டது. போராட்டத்தில் கட்சி தோழர்களுடன் நிறைய பையன்கள் பங்கேற்றனர். அவர்களில் சிலர் நிலப்பிரபு குடும்பங் களிலிருந்து வந்தவர்கள். அவர்கள் போலீசாரிடம் மற்றவர்களை காட்டிக்கொடுக்கத் தயங்கவில்லை. நிலப்பிரபு குடும்பத்தைச் சேர்ந்த வேறு சிலர் காங்கிரசுடன் சேர்ந்த கம்யூனிஸ்ட்டுகளுக்கு எதிராக செயல்பட்டனர். இப்படி காட்டிக் கொடுக்கப்பட்டதன் விளைவாக எவ்வளவு பேர் கொல்லப்பட்டனர் தெரியுமா?

**குடும்பம், குழந்தைகள், அரசியல்**

குழந்தைகள் அரசியலில் ஈடுபடுவது என்பது பல விஷயங்களைப் பொறுத்தது எனக்கூறும் ப்ரிஜ்ராணி, "என் பெண்ணையே எடுத்துக் கொள்ளுங்கள். அவள் ஒரு டாக்டர். திருமணத்திற்குப் பின் அரசியல் ஈடுபாடு இருந்தது. அவள் கணவருக்கு கிடையாது. அதனால் இப்போது நடுத்தர வர்க்கப் பார்வை வந்துவிட்டது. அவள் மீதும் தவறு உள்ளது. இக்காலத்து பெண்கள் சௌகரியங்களுக்குப் பழகி விடுகின்றனர். அதுதான் பிரச்சனை. எனது ஒரு மகள் ஒரு பாடகி. அவளும் வேலையில் இல்லை. என் மகன் டாக்டர். அடுத்த மகன் வங்கியில் வேலை பார்க்கிறான். அவன் சங்க வேலைகளை செய்வதுண்டு' எனக்குறிப்பிட்டார்.

"நான் என் கணவரால் கட்சிக்கு வரவில்லை. கட்சியில் பணி புரிய ஆரம்பித்த பின்னரே, அவரை சந்தித்தேன். திருமணத்திற்குப்

பின்பும் நாங்கள் தனியே இருக்க வேண்டியதாயிற்று. கட்சி என் கணவர் கவுரை நலகொண்டாவுக்கு அனுப்பி விட்டது. அப்போது நான் கர்ப்பிணி. குழந்தை பிறந்தபோது எங்கு தங்குவது எனத் தெரியவில்லை. என் முஸ்லிம் நண்பர்கள் தான் உதவியாக இருந்தார்கள். என்னையும், எனது சகோதரியையும் அவர்கள்தான் பார்த்துக் கொண்டனர். ஒரு வருடம் கழித்து அவர் திரும்பினார். தேர்தலுக்குப் பின்னர் கைது செய்யப்பட்டார். கட்சியின் நிலையும் சொல்கின்ற மாதிரி இல்லை. ரொம்பவும் கஷ்டம்.

தெலுங்கானா போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் என்றாலே ஏதோ தீண்டத்தகாதவர்கள் மாதிரியான நிலை. ஆனால் கட்சி மீதும், தொண்டர்கள் மீதும் ஒரு மரியாதை உண்டு'.

## இன்றைய அரசியல் பற்றி

'பெண்கள் தையல் வகுப்புகளுக்குப் போகிறார்கள் எப்படி உள்ளது மாற்றம்? ஆயுதம் தாங்கி போராடுவதற்கு பதில் தையல் வகுப்பு என்ன சாதிக்க முடியும்? இன்று ஒரு கட்சி, நாளை ஒரு கட்சியென கட்சி தாவுகின்றனர். உண்மையான போராட்டம் இன்று எங்கே நடக்கிறது? பஞ்சாப், அஸ்ஸாம் எனப் பல மாநிலங்களில் போராட்டம். தலைவர்கள் பிரிவினைவாதத்தைத் தூண்டுகின்றனர். பெண்கள் நிலை.. பாலியல் பலத்காரம், தற்கொலை, வேலையின்மை எனப் பெண்கள் மீது பல கொடுமைகள். மக்கள் சுயநலம் பிடித்தவர் களாகி விட்டனர். இந்திராகாந்தியின் இருபதம்ச திட்டத்தை ஆதரித்தேன். பின்புதான் அது எத்தனை தவறு என தெரிந்தது. எனக்கு உள்ள கருத்து வேறுபாடுகளை மனம் திறந்து சொல்வேன்- விவாதம் செய்வேன். என் கணவரிடம் கூட ஒரு கட்சியில் உள்ள உறுப்பினர் போலத்தான் அவரிடம் கட்சி விஷயங்களை பேசுவேன்..

இன்றும் கிராமங்களுக்கு போக வேண்டும் என்ற அவா ப்ரிஜ்ராணிக்கு உண்டு. இளம் பருவத்திலேயே அரசியலில் ஈடுபட்டு, சுயமாக கல்வி கற்று, முன்னுக்கு வந்த ப்ரிஜ்ராணி கவுரின் அனுபவங்கள் இன்றைய யதார்த்தத்துடன் பொருந்துகின்ற வகையில் அமைந்துள்ளது.

# 11. சிட்டாய் பறந்த சட்டெம்மா

பேசரா சட்டெம்மாவின் தந்தை அட்டதுருரு என்ற இடத்தில் வசித்து வந்தார். அவர் கம்யூனிச சித்தாந்தத்தில் பிடிப்பு உள்ளவர். அவர் ஏழை ஆண்களும், பெண்களும் கூலியின்றி 'வெட்டிகளாக' வேலை செய்வதை எதிர்த்தார். 'வெட்டி'முறை ஒழிய வேண்டு மென்றால், மக்கள் ஒற்றுமை அவசியமென உணர்ந்திருந்தார். கம்யூனிஸ்ட் இயக்கம்தான் மக்களை அடிமைத்தளையிலிருந்து விடுவிக்குமென நம்பினார்.

## சட்டெம்மாவின் குடும்பம்

சட்டெம்மாவின் தந்தை பிரகாலா மல்ல ரெட்டி தைரியம் மிகுந்தவர். அவர் கிராமத்தில் மக்களை திரட்டும் பணியை செய்து வந்தார். போலீசார் அவரை வலை போட்டு தேடிக்கொண்டிருந்த காலம் அது. போலீஸ் வருவது பற்றிய தகவல் அறிந்து கொள்ள ஆட்களை வைத்திருப்பார். அவரைத் தேடிக்கொண்டு ராணுவம் ஒருமுறை வந்தபோது, கையிலிருந்த கற்களை ராணுவத்தினர் மீது அந்தக் கிராம மக்கள் வீசுவார்கள். ஒவ்வொரு வாரமும் வீட்டில் இருக்கிறாரா என்று பார்ப்பார்கள். சட்டெம்மாவின் அம்மாவை கண்டபடி மிரட்டுவார்கள். அதனால் ராணுவம் வருகின்ற தகவல் கிடைத்த உடனேயே அவரும் வீட்டை விட்டு ஓடிவிடுவார். இந்தச் சம்வங்கள் நடக்கும்போது சட்டெம்மாவின் வயது பதினாறு. அவர்கள் வீட்டையே போலீசார் தீ வைத்துக் கொளுத்தி விட்டனர்.

## பிடிபட்ட புலிகள்

பிரகாலா மல்ல ரெட்டி தன் குடும்பத்தினரிடம் வீடு போனாலும் பரவாயில்லை. போலீசிடம் மாட்டிக்கொள்ளாமல் தூரத்திலுள்ள கிராமத்திறகுப் போய் விட வேண்டுமென முடிவெடுத்ததால் ஊர் ஜனங்களிடம் பணம் வசூல் செய்து தப்பிக்கும் போது, குதிரை மீது வந்த ராணுவத்தினரிடம் மாட்டிக்கொண்டார். அவரும் அவருடைய சகாவான தோழர் சோமி ரெட்டியும் வேகமாக ஓடியும் பிடிபட்டனர். இருவரையும் இழுத்து வந்து ஒரே மரத்தில் கட்டிவைத்து ராணுவத்தினர் சுட்டனர். சட்டெம்மாவும், அவரது அம்மாவும்

அப்போது அங்கு இல்லை. சட்டெம்மாவுக்கு தனது அப்பா கொல்லப் பட்டது பின்னர்தான் தெரிய வந்தது. ராணுவத்தினர் கொன்ற இரண்டு பேரையும் குழியில் போட்டுவிட்டு போய் விட்டனர். பத்தாவது நாளன்று ஈமச்சடங்குகளுக்கான ஏற்பாடு செய்யப்பட்டது. அன்று கூட போலீஸ் வருகின்ற செய்தி கேட்டு, மக்கள் ஓடி ஒளிந்து கொள்ள வரும்போது அவர்களையும் பிடித்து விடலாமென போலீஸ் நினைத்தது. இதைப்பற்றி சட்டம்மா கூறுகையில், 'எங்கள் வாழ்க்கையை நாங்கள் இப்படி தலைமறைவு வாழ்க்கையில் கழிக்க வேண்டியிருந்தது. எங்கள் வீடு கொளுத்தப்பட்டது. எங்கள் வயல்களில் பயிர்கள் அழிக்கப்பட்டன. மாடுகள் வயல்வெளிகளில் அவிழ்த்து விடப்பட்டன. எஞ்சின் கிணற்றுக்குள் எறியப்பட்டது. வேலை செய்ய ஆள் கிடையாது. அடிவாங்க வேண்டுமென்பதால் அவரவர் ஓடி ஒளிந்தனர். ஆனால் இன்றும் அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சிக்கு விசுவாசமாக இருக்கின்றனர்... என்றார்.

"மிளகாய் தூளைத் தயாராக வைத்திருப்போம். திடீரென போலீஸ் காரர்கள் வருவார்கள் என்பதால் என் அப்பா மிளகாய் தூளை வைத்திருக்கச் சொல்வார். கிராம மக்கள் அனைவருமே கம்யூனிஸ்ட் டுகள் என்பதால் அடிக்கடி போலீஸ் 'ரெய்டு' நடக்கும். பெண்களை தனியாக கண்டால் போலீஸ் விடாது. ரொம்பவும் மோசமாக நடத்துவார்கள். அதனால் பெண்கள் எல்லோரும் ஒன்றாக சேர்ந்து ஒரு வீட்டில் இரவு தங்குவோம். படுத்துக்கொள்வோம், அப்படியும் ஒருமுறை போலீஸ் வந்து கதவை தட்டியதும், வெலவெலத்து போய் விட்டோம். நாங்கள் நிறைய பெண்கள் இருப்பதை பார்த்து ... ஏண்டி.....(காது கொடுத்து கேட்க முடியாதபடி திட்டிவிட்டு) பெண்களை லத்தியால் அடித்து அவரவர் வீட்டிற்குப் போகும்படி மிரட்டினார்கள். சரமாரியாக அடி... 'விவரிக்க முடியாத கொடுமை களை அனுபவித்திருக்கிறோம்."

சத்யம்மா என்ற பெண் அவளது உறவினர்கள் 3 பெண்களுடன் தங்கியிருந்தபோது போலீஸ் அப்பெண்களின் கைபிடித்திழுத்து வம்பு செய்தபோது அப்பெண்களைப் பின்னால் தள்ளி விட்டு, கையில் விளக்குமாறுடன் சென்று போலீசை அடித்து நொறுக்கினாள். சத்யம்மாவுக்கு ஒரு கண்தான் உண்டு. இந்த சம்பவத்திற்குப் பிறகு போலீஸ் அவரைத் தேடிக்கொண்டு வரும். அந்த ஒத்த கண் பொம்பளை எங்கே என எல்லோரையும் மிரட்டுவார்கள். ஆனால் சத்யம்மா தந்திரமாக அவர்கள் பிடியில் அகப்படாமல் தப்பித்து விடுவார்.

சிலசமயம் போலீஸ்காரர்களை மக்கள் நையப் புடைத்து விடுவதும் உண்டு. அப்படி அடித்தால் போலீஸ் அந்த கிராமத்தின் பக்கம் கொஞ்ச நாட்களுக்குத் தலை காட்டாமல் இருப்பார்கள்.



சட்டெம்மாவைத் தேடி ஒருதடவை போலீஸ் வந்தபோது, அங்கே பனை மரத்திலிருந்து கள் எடுத்துக் கொண்டிருந்தவர்கள் தான் காப்பற்றினார்கள். போலீசிடம் அந்தப் பக்கம் போய்க் கொண்டிருந்த ஒரு பெண்ணை காண்பித்து அவர்தான் சட்டெம்மா எனக்கூறி போலீசார் அந்த பெண்ணைத் துரத்த அவர் தான் சட்டெம்மா இல்லையென கத்திக்கொண்டே ஓடி விட்டார்.

போராட்டமே நிலத்திற்கான போராட்டம். சட்டெம்மாவின் தாயாரின் கிராமத்தில் அரசுக்கு சொந்தமான 500 ஏக்கர் நிலமிருந்தது. எதற்காக இந்த நிலங்கள் தரிசாக இருக்க வேண்டும்? ஏழை மக்கள் ஏன் அந்த நிலத்தில் சாகுபடி செய்யக்கூடாது? மக்கள் நிலத்தை தயார் படுத்தும் போது ராணுவம் வந்தது. எத்தனை பேர் உயிரிழந்தனர். ராணுவம் கண்ணால் பார்த்த ஒருவரைக்கூட விட்டு வைக்கவில்லை.

சட்டெம்மாவுக்கு 2 மகள்கள், 2 மகன்கள் என 4 குழந்தைகள். பெண்கள் இருவருக்கும் திருமணமாகி விட்டது. சட்டெம்மாவுக்கு தள்ளாத வயது. இப்படியெல்லாம் கஷ்டப்பட்டு என்ன பயன்? இன்றும் கிராமங்களில் முன்னேற்றம் இல்லை. சட்டெம்மாவுக்கு வாத நோய் தாக்கி, செயலிழந்து இருக்கிறார். சிட்டாக பறந்து போராடிய சட்டெம்மாவுக்கு இன்று சிறு குழந்தைகள் போல தனது அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு கூட மற்றவர்களை நம்பியிருக்கிறார். அவரது உலகமே சுருங்கி விட்டதாக நினைக்கிறார். அவரது வாழ்க்கை நம் கண்களில் நீரை வரவழைக் கிறது. எந்த ஏழை விவசாயிகளின் கைகளில் நிலம் வர வேண்டுமென நிலப் போராட்டத்தில் இறங்கினாரோ, அது நிச்சயம் ஒருநாள் நிறைவேறும். சட்டெம்மாவின் காலத்தில் இல்லையெனினும் அவரது சந்ததியினரின் காலத்தில் அது சாத்தியமாகும்.

## 12. அக்கிராஜீ பள்ளியில்... கொண்டம்மா

கேசவபுரம் என்ற கிராமத்தில் தான் நான் வசித்தேன். ரஜாக்கர்கள் வந்து எங்களை சூழ்ந்து கொண்டனர். ஆண்களை ஒரு புறமும், பெண்களை மறுபுறமும் நிற்க வைத்து, எங்களை சூழ்ந்து கொண்டு, ஆண்களை கத்திகளைக் கொண்டு குத்தினார்கள். எங்களை நிர்வாண மாக்கினார்கள். எங்கள் கழுத்திலிருந்த கருகமணிகளை (தாலி) பிய்த்தெறிந்தார்கள். வண்டிகளிலிருந்து யூனிபாரத்துடன் இறங்கிய அவர்கள் எங்கள் வீடுகளை சூறையாடினார்கள். ஆண்களைக் கொன்று விடுவதாக மிரட்டினார்கள். எல்லோரையும் தீயிலிட்டு பொசுக்குவோம் என்றனர்.

அவர்களில் ஒருவன் என்னை நோக்கி துப்பாக்கியால் சுட்டான். நான் நினைவிழந்தேன். என் அத்தை எல்லம்மா லட்சம்மா, சால பாலம்மா, மங்கலி கௌலம்மா ஆகியோரும் இருந்தனர். எனக்கு குழந்தை கிடையாது. எங்களுக்கு கிராமத்தில் வசிக்கவே பயமாக இருந்தது. காடுகளில் தங்கி சமைத்து சாப்பிட்டோம். அது மோசமான காலம். இறந்து போன சடலங்களைப் பார்த்து கதறுவார்கள். எதற்காக இந்தக் கஷ்டத்தை அனுபவித்தோம், சங்கத்தைச் சேர்ந்தவர்கள் எங்களுக்காக போராடியதால்..."

### வஜ்ரம்மா

ரஜாக்கர்கள் எங்களை 'பதகம்மா' நடனம் ஆடச் சொல்லு வார்கள். நிர்வாணமாக்குவார்கள். எங்கள் கண் முன்பே ஆண்களை அடித்துக் கொல்வார்கள். வீடுகளுக்குத் தீ வைப்பார்கள். கிராமத்தை விட்டு ஓடி விட்டோம். 'கையில் மிளகாய் தூள், கற்கள் வைத்துக் கொண்டு ஓடுவோம்".

"கம்யூனிஸ்டுகளைக் கொல்வதற்காக ரஜாக்கர்கள் வந்தனர். அவர்களுக்காக நாங்கள் சமைப்போம். போலீசும் எங்களை அடித்தது. பாலியல் பலாத்காரம் செய்வோம் என மிரட்டியதுடன் நிற்கவில்லை. செய்து காண்பித்தனர். சித்தம்மா என்ற பெண் சோளக்காட்டில் வேலை செய்து கொண்டிருந்த போது, அவளை இழுத்துக்கொண்டு போய், பலாத்காரம் செய்தனர். 3 மாதங்கள் அவள் ஆஸ்பத்திரியில்



இருந்தாள். அவளுக்கு குழந்தை கிடையாது. அவளே சிறுமி. இருட்டும் வரை தினமும் காடுகளில் மறைந்து கிடப்போம். வயதான வர்களை கிராமத்திலேயே விட்டு விடுவோம். அவர்கள் இருமினால் சத்தம் கேட்கும். அதுபோலவே, குழந்தைகள் அழுதால் பிரச்சனை என்பதால், அவர்களையும் விட்டு விடுவோம். இரண்டு இரவுகள் ஒரே இடத்தில் தூங்க மாட்டோம். எங்கள் வீட்டார் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்தனர். யாராவது ஒரு ஆளை புளிய மரத்தில் ஏறி காவலுக்கு இருக்கும்படி செய்து விட்டு, பின்னர் சமைப்போம். குழந்தை, குடும்பம் வேண்டுமா? எதையுமே யோசிக்க முடியாது. அவரவர் பாதுகாப்புதான் முக்கியம். அம்மா, குழந்தை என்று ஒன்று இருக்கிறதா என்ன?

ராமபுரத்தில் நாங்கள் வயலில் வேலை செய்து கொண்டிருந்த போது, எனது மைத்துனர் குத்தப்பட்டார். ஒரே ரகளை. எனது ஒருமாத குழந்தை எங்கே போனது என்றே தெரியவில்லை. ஒரு ஆள் வந்தான். என் கன்னத்தில் குத்தினான். காது தோடுகளை பிய்த்து எடுத்தான். துப்பாக்கியால் என்னை... குத்தினான். ஒரு மாதம் ஆஸ்பத்திரியில் இருந்தேன். அனைத்தையும் அழித்தார்கள்".

### கஜ்ஜேல பாலம்மா

நான் முடி திருத்துவோர் வகுப்பைச் சேர்ந்தவள். மூன்று மகன்கள். மூன்று பேரும் செத்துப் போய் விட்டனர். ஒரு பெண் அவளும் இறந்து விட்டாள். அவர்களை நான் கடைசிவரை கண்டுபிடிக்க முடியவில்லை. ஒரு மகள் இப்போது இருக்கிறாள். கூலி வேலை செய்கிறேன். முடிந்தால் வேலை செய்வேன். இல்லாவிட்டால் இப்படி அமைதியாக படுத்துக்கிடப்பேன்".

"என் கணவரும், கம்யூனிஸ்ட் கட்சியில்தான் இருந்தார். அதனால்தான் ரஜாக்கர்களுக்கு எங்கள் குடும்பத்தின் மேல் அவ்வளவு ஆத்திரம். அவர்கள் அடித்து, உதைத்து சித்திரவதை செய்ததில் என் கணவர் இறந்து போனார். துண்டு துண்டாக அவரை வெட்டி னார்கள். எல்லாம் முடிந்து விட்டது. என்ன இருக்கிறது சொல்வ தற்கு? அக்கிராஜீபள்ளி ஒற்றுமையுடன் இருந்தது. ரஜாக்கர்களும், போலீசும் வந்தன. வீட்டிற்குள் அவர்கள் நுழையும் வரை எங்கே இருப்பார்கள் என்று தெரியாது. அவர்களுக்கு எங்கள் பாஷை தெரியாது. என் குழந்தை தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த போது, வீட்டிற்குள் வந்து மிரட்டினார்கள். அவர்கள் மீது புளித் தண்ணீரை கொட்டிவிட்டு வெளியே ஓடி வந்து விட்டேன். என் மகள் தொட்டிலிலேயே இறந்து விட்டாள். எங்கள் கிராமம் முழுவதும் கம்யூனிஸ்ட் என அவர்களுக்குத் தெரியும். நாங்கள் அனைவரும் ஒற்றுமையுடன் தான் இருந்தோம்".

**சைதம்மா**

என் கணவரை துப்பாக்கியால் சுட்டார்கள். என் மகன்கள் அவர் மீது விழுந்து கதறினர். ரஜாக்கர்கள் என்னை... திட்டினார்கள். என் கையை பிடித்திழுத்து வளையல்களை உடைத்தார்கள். பெண்கள் தனியாக இருப்பது தெரிந்தால், போலீசார் அவர்களை பலாத்காரம் செய்வார்கள். அதனால் தெருவிலுள்ள அனைவரும் எப்போதும் கூட்டமாக ஒரு குயவர் வீட்டில்தான் இருப்போம். நாங்கள் உயிரோடு இருப்போமா என்று கூட எங்களுக்குத் தெரியாது. வீடுகளில் விளக்கு கூட ஏற்ற மாட்டார்கள். பைரம்பள்ளி கம்யூனிஸ்ட் கோட்டை என்பார்கள். அங்கு மிக அதிக எண்ணிக்கையில் ரஜாக்கர்கள் தாக்குதல் தொடுத்தனர். என்னிடம் உள்ள மாவை வைத்து ரொட்டி சுட்டு கம்யூனிஸ்ட்டு போராளிகளுக்குத் தருவேன். கம்யூனிஸ்டுகள் எங்களுக்கு பாட்டு கற்றுத் தருவார்கள். பெண்களும், ஆண்களும், குழந்தைகளுமாக சந்தோஷமாக இருக்க முடியாது. எப்போது தாக்குதல் வருமெனத் தெரியாது.

நிலப் பிரபுக்கள் ரொம்பவும் மோசம். பெண்கள் சற்று அழகாக இருந்தால், கூப்பிட்டு அனுப்புவார்கள். போராட்டம் தொடங்கியது முதல் தினமும் போலீஸ் தாக்குதல்தான். எங்கள் வாயைத் துணியால் கட்டி விட்டு பலாத்காரம் செய்வார்கள். எங்களால் கத்தக்கூட முடியாது. நான் சின்னப்பெண். என்னை பலாத்காரம் செய்த போலீசார் கிராமத்தை விட்டு ஓடி விட்டனர். நான் அழுது கொண்டே இருந்தேன். என் கணவர் எதுவுமே சொல்லவில்லை. என்னை நன்றாகப் பார்த்துக் கொண்டார்.

காடுகளில் தனியாகத் திரிந்தேன். ஒரு மாதம் குண்டூரில் இருந்தேன். வீடுகளில் தங்க முடியவில்லை. நாங்கள் அனைவரும் பலாத்காரம் செய்யப்பட்டோம். என்ன நடந்தது என்று யாரும் கேட்கவில்லை.... எங்கள் வீட்டு ஆண்கள் கொல்லப்பட்டனர். எல்லாவற்றையும் இழந்து விட்டோம். என்ன இருக்கிறது? உழைத்து சாப்பிடுகிறோம், கிராமம் ஒற்றுமையுடன் இந்தக் கொடுமைகளை சந்தித்தோம். கிராமம் முழுவதும் கட்சியுடன் இருந்தது.

**கொல்ல மல்லம்மா**

எனக்கு இப்போது 60 வயதாகிறது. ரஜாக்கர்கள் வீடுகளுக்குத் தீ வைத்தார்கள். மக்களைக் கொன்று குவித்தார்கள். மாட்டுத் தொழுவங்களுக்கு தீ வைத்தார்கள். எங்களை நிர்வாணமாக்கி 'பதகம்மா' ஆடச் சொன்னார்கள். நாங்கள் எதிர்த்தோம். எதிர்த்த வர்களை எரித்தார்கள். இந்தக் கிராமத்தில் பாதிக்கப்படாதவர் ஒருவர் கூட இல்லை...!

❖❖❖❖❖

வீரம் செறிந்த தெலுங்கானா போராட்டத்தில்
பங்கேற்ற வீராங்கனைகள்



0010620

819042117-4